
விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com




சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 27 சனிக்கிழமை (09.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

# மகிந்தவின் இந்திய விஜயத்தை கண்டித்து பல இடங்களில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து தமிழகத்திலும், டில்லியிலும் வேறுபல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

பௌத்த புனிதத்தலமான பீகாரிலுள்ள புத்தகாயாவுக்கும், ஆந்திராவில் உள்ள திருப்பதிக்கும் இலங்கை ஜனாதிபதி தனிப்பட்ட பயணமாக வந்துள்ளதை இந்தியாவின் பல்வேறு அரசியல் கட்சிகள், வழக்குரைஞர்கள் சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் போன்றவை கண்டித்துள்ளன.

சென்னை : சென்னையில் தி.மு.க. தலைமையில் தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பான டெசோவில் அங்கம் வகிக்கும் பல்வேறு கட்சிகளும் இலங்கை ஜனாதிபதியின் இந்திய வருகையைக் கண்டித்து கூட்டம் ஒன்றை நடத்தின.

இந்தக் கறுப்புச்சட்டை ஆர்ப்பாட்ட கூட்டத்தில் உரையாற்றிய தி.மு.க. தலைவர் கருணாநிதி, தமிழையும் தமிழர்களையும் அழிக்க இலங்கை ஜனாதிபதி கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுவதாக குற்றஞ்சாட்டினார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் அமைப்புகளுக்கு கருணாநிதி நன்றி தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் இவ் விவகாரம் தொடர்பாக சென்னையில் ரயில் மறியல் போராட்டம் ஒன்றை (02ஆம் பக்கம் பார்க்க)


புத்தகாயாவில் பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமாரால் அழைத்துச் செல்லப்படும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ...


ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லியில் இந்தியப் பிரதமர் இல்லம் முன் போராட்டத்தில் வைகோ...



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உருவப்பொம்மையை எரித்து எதிர்ப்பை வெளியிட்டபோது...

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்-ஜெயா

(சென்னை)



எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் சபை அமர்வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்படும் தீர்மானத்தில் இந்திய அரசு எவ்வித வலுவிழப்பும் மேற்கொள்ளாமல் ஆதரிக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் எல்லை தாண்டிய மீன்பிடியை உடனடியாக தடுத்து நிறுத்த வலியுறுத்தி வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்ட பேரணி நடத்தப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் செயற்பாட்டை உடனடியாக நிறுத்தக் கோரி இடம் (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர்களுக்கு பாதுகாப்பு அளியுங்கள்!

(கொழும்பு)

சென்னையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை மீதான தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியாவில் வசித்து வருகின்ற இலங்கையர்களுக்கும் இலங்கை நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு புதுடில்லியிடம், இலங்கை அரசாங்கம் நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியாவில் வசித்து வருகின்ற இலங்கையர்களுக்கும் மற்றும் மகாபோதி சமூகம், இலங்கை ஏயார் லைன்ஸ் போன்ற இலங்கை நிறுவனங்களுக் (02ஆம் பக்கம் பார்க்க)

## ஒற்றுமையுடன் போராடியிருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும்!

### ஆர்ப்பாட்டத்தில் கருணாநிதி உரை

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சென்னையில் கறுப்பு உடை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என, டெசோ உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதையடுத்து நேற்று டெசோ குழுவினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழகம் எங்கும் பரந்தளவில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக (02ஆம் பக்கம் பார்க்க)



## வானிலிருந்து விழுந்த மர்மப் பொருள்

(கொழும்பு)

பத்தரமுல்லை, ஜயந்திபுர பகுதியில் வானிலிருந்து மர்மப் பொருளொன்று நேற்று விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இது விண்கல்லாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

எனினும் இது தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. அண்மைக் காலமாக இலங்கையில் இவ்வாறான அசாதாரண சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஊழல் மோசடிகள் அதிகரிப்பு-கரு

(கொழும்பு)

நாட்டில் பாரியளவில் ஊழல் மோசடி சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஊழல் இடம்பெறும் இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வறுமையில் வாடுவது இயல்பானதே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு வருகிறார் கமலேஷ் சர்மா

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நாளை கொழும்புக்கு விஜயத்தை மேற்கொள்கின்றனர் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் நடத்தப்படவுள்ள பொதுநலவாய உச்சிமாநாட்டின் ஏற்பாடுகளை மேற்பார்வை செய்வதன் பொருட்டே செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தலைமையிலான குழு இலங்கை வருவதாக அமைச்சின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவினை லண்டனில் சந்தித்து உரையாடியிருந்தார். அதனைத் தொடர்ந்து கமலேஷ் சர்மா உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகளை பார்வையிடுவதற்காக இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

இவரது விஜயத்திற்கு முன்னதாக மேலதிக ஏற்பாடுகளை கண்காணிக்கும் பொருட்டு பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதிகள் சிலர் முன்கூட்டியே (19ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## மகிந்தவின் இந்திய ...

நடத்தினர். அதில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகத் தலைவர் தா.பாண்டியன் இலங்கைத் தமிழருக்கு நியாயம் கிடைக்க இந்திய அரசு முயல வேண்டும் என்று தெரிவித்தார்.

**புதுடில்லி**

இலங்கை ஜனாதிபதி டில்லி வந்து அங்கிருந்து புத்த காயா செல்வதாக இருந்தது. ஆனால் ம.தி.மு.க தலைமையில் டில்லியில் ஆர்ப்பாட்டங்கள் நடந்ததால் அவர் டில்லி வராமல் ஒரிசா மாநிலம் கட்டாக் சென்று அங்கிருந்து திருப்பதி சென்றதாக தெரிகிறது. டில்லியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ம.தி.மு.க வினர் முன் பேசிய அக்கட்சியின் தலைவர் வைகோ, இந்தியா வர மகிந்த ராஜபக்ஷவை அனுமதித்தமைக்காக இந்திய அரசைக் கண் டித்தார்.

பிரதமர் அலுவலகத்துக்கு ஊர்வலம் செல்ல முயன்ற வைகோவையும் அவரது 500இற்கும் மேற்பஞ்ரீட்ட ஆதரவாளர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

**புத்தகாயா**

புத்தகாயாவில் உள்ள மகாபோதி விகாரையில் இலங்கை ஜனாதிபதி பிரார்த்தனையில் ஈடுபட்டபோது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டக் கோஷங்களை எழுப்பினர்.

இலங்கை ஜனாதிபதிக்கு பீகார் முதல்வர் நித்திஷ் குமார் விருந்து உபசாரம் வழங்கிய விடுதியின் முன்பாகவும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் மாணவர் சங்கத்தினரும் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

புத்தகாயாவில் பிராத்தனை முடித்துக் கொண்டு ஜனாதிபதி திருப்பதி சென்றுள்ளதாகத் தெரிகிறது.

**திருப்பதி**

ஜனாதிபதி ராஜபக்ஷ நேற்று மாலை 6.30 மணியளவில்திருப்பதியைச் சென்றடைந்துள்ளார்.

கட்டாக்கிலிருந்துவிமானம் மூலம் திருப்பதி விமான நிலையம் சென்ற மகிந்த, திருப்பதியில் இன்று அதிகாலை நடைபெறவுள்ள சுப்பிரபாத பூசையில் கலந்து கொள்ளவுள்ளார்.

அவரின் வருகையை ஒட்டி திருப்பதியில் 144 தடை உத்தரவு அமுலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

திருப்பதி அமைந்துள்ள ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்திலும் தமிழக ஆந்திர எல்லையிலும் ஆர்ப்பாட்டங்களைத் தவிர்க்கும்முகமாக நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-11)

## ஒற்றுமையுடன் போரா...

பலத்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றபோதிலும் அவர் இந்தியாவிற்குள் தனது விஜயத்தினை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, டெசோ அமைப்பு சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தி.மு.க தலைவர் கலைஞர் தலைமையில் கறுப்பு உடையில் நேற்று காலை 10 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

இதில் தி.மு.க பொருளாளர் ஸ்டாலின், தி.க. தலைவர் வீரமணி, விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், கனிமொழி எம்.பி., சு.ப.வீரபாண்டியன் மற்றும் சுப்புலட்சுமி ஜெகதீசன் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் 3 ஆயிரம் பேர் கலந்து கொண்டுள்ள இந்தக் கூட்டத்தில், மகிந்தவின் வருகையைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இந்தநிலையில் ஆர்ப்பாட்டத்தில் பேசிய கருணாநிதி, இலங்கையில் தமிழ் கலாசாரம், தமிழ் பெயர்கள், தமிழ் இனம் அழிக்கப்பட்டு வருகிறது.

கிராமங்களின் தமிழ் பெயர்கள் சிங்களப் பெயர்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

மொழியையும், இனத்தையும் அழிக்க சிங்கள அரசு கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகின்றது. ராஜபக்சவிற்கு பாடம் புகட்டவே தமிழகம் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அனைவரும் ஒற்றுமையுடன் போராடினால் வெற்றிகிடைக்கும் முன்னர் ஒற்றுமையுடன் போராடியிருந்தால் தமிழீழம் கிடைத்திருக்கும் என்று கூறினார். (செ-11)

## இலங்கையர்...

கும் இந்திய அரசாங்கம் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று புதுடில்லிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் கேட்க வேண்டுமென இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது என இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சென்னையிலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்குள் கத்திகள், பொல்லுகள், இரும்புக் கம்பிகள் சகிதம் 15 பேரைக் கொண்ட குழுவொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை நுழைந்தது.

இவ்வாறு நுழைந்த இக்குழுவினர் 2 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பாதுகாப்புக் காவலாளியையும் தங்களது கட்டுப் பாட்டினுள் வைத்துக் கொண்டு இலங்கை வங்கிக்கிளை அலுவலக பாதுகாப்பு அறையினுடைய யன்னல்களையும் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர நிலையுத்தின் கண்ணாடிக் கதவுகளையும் உடைத்து நொருக்கினர்.

இதன்போது இவ்வங்கியின் 2 ஊழியர்கள் காயமடைந்தனர். பயிலுநரொருவருக்கும் காயமேற்பட்டதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த இரு வங்கி ஊழியர்களும் சென்னையிலுள்ள கில்போக் மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**Computer Repairs at your Home or Office Step !**

Island wide Service

We're undertaking-:

Assembling, Service & Maintenance.
Laptop Repairs.
ADSL Configuration.
Virus Solutions, Software Installation.
Computers & Computer Parts Sales & Delivery.



PC CARE
K.K.S ROAD, INUVIL
Ask for more - 0774767123, 0772162622, 0212334004
E-mail us - servicedeptpccare@gmail.com
(1699)



**வெளிநாட்டு Student Visa தொடர்பான இலவச விளக்கக் கருத்தரங்கு**

A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து பயன் பெறலாம்.

விடயதானங்கள்:

* வெளிநாட்டுக் கல்விக்குத் தேவையானவை எவை?
* பிறநாட்டுக் கல்வி நிறுவனங்களின் தரம் ஸ்திரத்தன்மை
* கல்வி கற்றுக் கொண்டே உழைக்க வழி என்ன?
* நாடுகள் பற்றிய அலசல்
* அவசியமான வினாக்களுக்கு உரிய பதில்கள்.

வளவாளர்: வடமராட்சியின் மைந்தன் திரு.ஜே.ரெட் B.Sc(Hons) University of West England

இடம்: திசைகாட்டி குழுமத் தலைமைக் காரியாலய கேட்போர் கூடம்

காலம்: 10.02.2013 ஞாயிறு மு.ப. 10 மணி

முற்பதிவு 021 221 9016 அல்லது 0721869299 என்ற தொலைபேசி மூலம் முன்பதிவு செய்யவும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



(அ-2387)



# வேலை வாய்ப்பு

## செலிங்கோ லைப் (NY 02)

## நெல்லியடி கிளைக்கு ஆளணியினர் தேவை

1. விற்பனை ஆலோசகர்
2. விற்பனை நிறைவேற்று அதிகாரி

**தகைமைகள் :**

- வயதெல்லை : 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்
- G.C.E. O/L கணித பாடம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
- G.C.E. A/L மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- அத்துடன் சமீபத்தில் பெறுபேறுகள் வெளியாகியவர்களும் தோற்றலாம்.
- காப்புறுதி துறையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- அரச துறையில் ஓய்வு பெற்றவர்கள்




நேர்முகத் தேர்வு: 10.02.2013
ஞாயிற்றுக்கிழமை : 9.30- 12.30

நெல்லியடி கிளைக்கு சமுகமளிக்கவும் சுயவிபரக் கோவை அவசியமானது வாழ்க்கையில் வெற்றி பெற எம்முடன் இணையுங்கள்

வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பவர்களுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம்

முகாமையாளர்,
செலிங்கோ லைவ்
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

CEYLINCO LIFE (1691)



**'ENGLISH in ACTION'**

(i) Basic Level (ii) Higher Level
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
773 212 711
(1637)








**பிள்ளையார் இன்**

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



**Shakthy microtec**
Computer wholesaler

பெற்றோர்களே....!

உங்கள் பிள்ளைகளும் கணனி அறிவினைப் பெற்று மிளிர்ந்திட...

Branded கணனிகள் இப்போது யாழ்ப்பாணத்தில்...




எமது பிரதேச மாணவர்களின் கணனி அறிவினை மேம்படுத்த அமெரிக்காவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பெற்ற கணனிகளை மிகவும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு :
பாடசாலை மாணவர்கள், கல்வியியற் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வறிய மாணவர்களின் நலன் கருதி 10.02.2013 முதல் 10.03.2013 வரை விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

இல.170, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில்.



**விற்பனைக்குண்டு**

517/8 ஸ்ரான்லி வீதி அத்தியடியில் 1 3/4 பரப்புக்காணியில் வீடு, கிணறு உட்பட விற்பனைக்கு உண்டு

0778035236
0777065236
(அ-2372)



**வாடகைக்குண்டு**

517/7 ஸ்ரான்லி வீதி அத்தியடியில் 5 அறைகள், 3 மலசலகூடம், வாகனத் தரிப்பிடம் உட்பட வீடு வாடகைக்கு உண்டு. அரச, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

0778035236
0777065236
(அ-2372)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூத்தோர் பெருமை

ஒரு ஊரிலே ராஜா ஒருவர் இருந்தார். அவருக்குப் பின் இளவரசன் பட்டத்துக்கு வந்தான்.

இந்த இளவரசனுக்கு ஒரு குணம்... அதாவது அவனுக்கு வயதானவர்களைக் கண்டால் பிடிக்காது.

இளைஞர்களின் வளர்ச்சிக்கு பெரியவர்கள் இடையூறாக இருக்கிறார்கள் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அதனால் அவன் பட்டத்துக்கு வந்ததும் ஒரு உத்தரவை பிறப்பித்தான்.

"இந்தத் தேசத்திலே பெரியவர்கள் யாரும் இருக்கக்கூடாது. அவர்களை நாடு கடத்த வேண்டும். இந்த உத்தரவை மீறி யாராவது வயதானவர்களை வீட்டிலே வைத்திருந்தால், அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தார்.

எல்லோரும் இந்த உத்தரவுக்குப் பயந்து அவ்வூரில் இருந்தவர்கள் தங்களது அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரையும் வேறு தேசத்துக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

இளைஞர்களை மட்டும் வைத்துக் கொண்டு இவன் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்.

இப்படி இருந்த காலத்திலே அந்நிய நாட்டிலே இருந்து ஒரு வித்தைக்காரன் வந்தான். என்னோடு போட்டியிடக்கூடிய புத்திசாலிகள் யாராவது இந்தத் தேசத்திலே இருக்கிறார்களா? என சவால் விட்டான்.

இப்படியாக இவன் சவால் விட்டது அந்த இளவரசன் காதுக்கு எட்டியது.

உடனே அவனை அழைத்து "என்ன உன்னுடைய சவால்... அதைச் சொல்" என்றார் இளவரசன்.

"இளவரசரே! வேறு ஒன்றுமில்லை. சாம்பலைக் கயிறாக திரிக்க வேண்டும். இது ஒரு போட்டி. அதன்பின் இன்னொரு போட்டி இதோ இந்த சங்கிலே நூலைக் கோர்த்துத் தர வேண்டும் என்றான்.

இரண்டுமே சாத்தியமில்லாத விடயம் என்பதை இளவரசன் உணர்ந்தார்.

இதுதான் இன்னொரு தேசத்திலே இருந்து வந்தவன் போட்ட சவால். இதைக் கேட்ட இளவரசனுக்கு அவமானமாகப் போய் விட்டது.

இவனுடைய சவாலை ஏற்றுக் கொள்வதற்கு இந்தத் தேசத்திலே இளைஞர்கள் யாருமே கிடையாதா? என்று கேட்டான். இதை ஊர் அறிய அறிவிக்குமாறு சொன்னான்.

ஒரேயொரு இளைஞன் மட்டும் முன்வந்தான். "என்னால் முடியும்" என்றான்.

இளவரசனுக்கு ஆச்சரியம்...

"எங்கே சாம்பலைக் கயிறாகத் திரித்து கொண்டுவா பார்க்கலாம்" என்றான்.

இவன் சற்று இருங்கள் என்று சொல்லிவிட்டு அடுத்த அறைக்குப் போனான். சிறிது நேரத்தில் தட்டோடு ஓடி வந்தான். அந்தத் தட்டிலே... சாம்பலினால் திரிக்கப்பட்ட கயிறு! எல்லோருக்கும் ஆச்சரியம்.

சரி அடுத்தது சங்கிலே நூலைக் கோர்ப்பதா... சிறிது நேரம் பொறுங்கள் என்று கூறிவிட்டு சற்று நேரம் கழித்து திரும்பி வந்தான். அவன் கையிலே சங்கு. அதிலே ஒரு பக்கம் நூல் போய் இன்னொரு பக்கம் வெளியே வந்திருந்தது.

அந்நிய தேசத்தவனுக்கு வெட்கமாகப் போய் விட்டது. தோல்வியை ஒத்துக் கொண்டு திரும்பினான்.

இளவரசன் இந்த இளைஞனைப் பாராட்டி, பரிசு வழங்கினார்.

அதன்பின் மெதுவாகக் கேட்டார்; அது சரி... அது எப்படி சாம்பல் கயிறானது என்றார்.

ஒரு கயிறையெடுத்து தட்டத்தில் வைத்து கொளுத்தினேன். அது சாம்பலானது. அசையாமல் மெதுவாக எடுத்து வந்தேன்.

சங்கிலே நூலை நுழைத்தது எப்படி? என்றார்.

ஒரு எறும்பைப் பிடித்து அதன் உடம்பிலே ஒரு மெல்லிய நூலைக் கட்டினேன். அடுத்த பக்க நுழைவாயிலில் சர்க்கரையை வைத்தேன். எறும்பு நூலை இழுத்துக் கொண்டு இந்தப் பக்கமாக வந்தடைந்தது என்றான்.

இந்தத் தந்திரம் உனக்கு எப்படித் தெரியும்? என்றார் அவர்.

இளவரசரே! மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரியாமல் என்னுடைய தாத்தா, அப்பா, அம்மா ஆகியோரை வீட்டிலே மறைத்து வைத்திருக்கிறேன். அவர்கள் கூறித் தந்த யோசனைதான் இதுவென்றான்.

இளவரசனுக்கு தவறு புரிந்தது. நாடு கடத்திய பெரியவர்களையெல்லாம் உடனடியாக நாட்டினுள் திருப்பி அனுபவ அறிவுக்கு மதிப்புக் கொடுக்க ஆரம்பித்தார்.

பெரியவர்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்; அவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது. அவர்களது ஒவ்வொரு வார்த்தையும் பெறுமதியானவை என்பதை உணர்ந்து நடக்க வேண்டும். முக்கியமாக சிறியவர் பெரியவர்களின் சொற்படி நடப்பது சாலச் சிறந்ததாகும்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பிறேமசந் ஆய்வாளர் நிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

இந்திய எழுத்தாளர் பிறேமசந் ஆய்வாளர் நிலைக்கான விண்ணப்பங்களை இந்தியத் துணைத் தூதரகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக யாழிலுள்ள இந்தியத் துணைத்தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரபல இந்திய எழுத்தாளர் பிறேமசந்தின் 125 ஆவது பிறந்த தினத்தையொட்டி இந்திய சாகித்திய கல்வி நிதியம் அவருடைய பெயரைகொண்டு ஆய்வாளர் நிலையை ஏற்படுத்தி வருடாவருடம் சார்க் அங்கத்துவ நாடுகளிலிருந்தும் கலாசாரம், இலக்கியத்துறை திறமைவாய்ந்த ஒருவருக்கு வழங்கி வருகின்றது.

ஆய்வாளர் நிலை எழுத்தாளர் அல்லது துறை ஆய்வாளரின் வசதிக்கேற்ற ஒரு மாதம் தொடக்கம் மூன்று மாத காலமாக இருப்பதோடு சாகித்திய நிலையத்தால் உணவு, தங்குமிடம், சர்வதேச பிரயாணம், இந்தியாவுக்குள்ளான பயணம் ஆகியன வழங்கப்படும்.

மேலதிகமாக மாதாந்தம் இந்திய ரூபா 12 ஆயிரம் சிறிய செலவுகளுக்காக வழங்கப்படும்.

வருகைதரும் ஆய்வு மாணவன்/மாணவி தன்னுடைய ஆக்கங்கள் பற்றி அவருடைய ஆய்வுநிலை காலப்பகுதியில் இந்தியாவில் வெவ்வேறு இடங்களில் சொற்பொழிவுகள்/ கலந்துரையாடல்கள் அளிக்க வேண்டியவராவர்.

கடந்த 2011 இல் கவிஞரும் நூலாசிரியருமான சுமதி சிவமோகனுக்கும் 2012 இல் எழுத்தாளர் யஸ்மனி குணரத்னத்திற்கும் சாகித்திய நிலையத்தால் மதிப்புமிக்க பிறேமசந் ஆய்வாளர்நிலை வழங்கப்பட்டது.

மதிப்பு மிக்க பிறேமசந் ஆய்வாளர்நிலை 2013 க்கு இலங்கையில் கலை, இலக்கியத்துறையில் புகழ் வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெளியீட்டாளர்கள் அல்லது இலங்கையிலுள்ள இலக்கிய அமைப்புக்கள் எழுத்தாளர்/துறைசார் அறிஞர்கள் பெயரை அவர்களுடைய சுயவிபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பமுடியும்.

விண்ணப்பங்கள் இந்திய கலாசார நிலையம், 16/2, கிறெகரிஸ் இடம், கொழும்பு 7 என்னும் முகவரிக்கு மாதம் 25 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு இந்திய கலாசார நிலையத்தின் தொலைபேசி இலக்கமான 2684 698 என்ற இலக்கத்தினூடாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரி iccrcolombo@gmail.com ஊடாகவோ தொடர்பு கொள்ளலாம். விண்ணப்பத்தின் பிரதி ஒன்றினை இந்திய துணைத்தூதரகம், இல.14இ, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# இழப்பீடுகளை பெற விண்ணப்பிக்கலாம்

முல்லை. மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் குடும்பங்கள் வன்னியில் இடம்பெற்ற போரின் போது வீடுகள் அழிவடைந்தும் உடைமைகள் சேதமடைந்து அல்லது அழிவடைந்து இருப்பின் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் இழப்பீட்டுக்காக விண்ணப்பிக்குமாறு முல்லை. மாவட்ட அரச அதிபர் நா. வேதாயகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தெரிவிக்கையில், முல்லை மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து வன்னியின் இறுதிப்போரின் போது முல்லை. மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் தங்கள் பகுதி பிரதேச செயலகங்களிலோ அல்லது முல்லை. மாவட்ட செயலகத்திலோ இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை பெற்று உடன் பூர்த்தி செய்து எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

## சந்தைகளில்·நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 65 | 50-60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 250 | 250 |
| தக்காளி | 120 | 160 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 50 | 70 | 70 |
| கரட் | 100 | 80 | 150 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 80 | 100-120 | 100-140 |
| பெரிய வெங்காயம் | 90 | 60 | 100-120 | 100 |
| பாகற்காய் | 50-60 | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 60-80 | 60 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 | 150 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140-150 | 160 | 120 | 150 |
| முருங்கைக்காய் | 350 | 500 | -- | -- |
| போஞ்சி | 60 | 40 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 10-20 | 15 | 20 | 30 |
| தேசிக்காய் | 20-40 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 48 | 40-43 |
| இராசவள்ளி | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 60-80 | 130 | 160 | 80 |

# இராசி பலன்

09.02.2013
(தை 27, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 3.19 மணிவரை
உத்தராடம் காலை 7.07 மணிவரை
திருவோணம் பின்னிரவு 6.06 மணிவரை
இராகுகாலம் 9.34-11.04 மணிவரை
சுபநேரம் 3.34-5.04 மணிவரை
அமாவாசை விரதம்.

**மேடம்** தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தூர தேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும், அந்நியர் உதவியுண்டு.

**இடபம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், முன்னோர் வழிபாட்டால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பேச்சில் நிதானம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்ச்சி அதிகம் தேவை, போசன சுகமுண்டு.

**கடகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன் வருவர், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், அபூர்வ சந்திப்புண்டு.

**சிங்கம்** மனதில் உற்சாகம் குடி கொள்ளும், வேலையில் நல்ல பெயர் கிடைக்கும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், எண்ணிய காரியங்களை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

**கன்னி** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகளால் ஏற்படும் செலவுகளை குறைக்கும் எண்ணம் மேலோங்கும், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள்.

**துலாம்** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய் வழி ஆதரவு பெருகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** நண்பர்கள் உதவி செய்ய முன்வரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வருமானம் திருப்தி தரும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**தனுசு** இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலம் சீராகும், சில விவாதங்கள் ஏற்படலாம்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனைகள் ஏற்படலாம், குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**மீனம்** அதிர்ஷ்டகரமான நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், கலகலப்பான சம்பவங்கள் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப சுகாதார நிலையம் நேற்று முன்தினம் திறப்பு

## வலம்புரி செய்தியை அடுத்து


(ஆனைக்கோட்டை)

ஒருவருட காலமாக பூட்டப்பட்டு இயங்காத நிலையில் இருந்த ஆனைக்கோட்டை முள்ளி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளது.

மேற்குறித்த ஆரம்ப சுகாதார நிலையம் பூட்டப்பட்டு பற்றைக் காடாக இருந்தமையால் அப்பகுதியில் உள்ள கர்ப்பிணித்தாய்மார்கள் வேறு வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது.

இவ்வாறு பூட்டப்பட்டிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் குறித்தும் அதனால் எதிர்கொள்ளும் சிரமம் குறித்தும் வலம்புரி பத்திரிகையில் கடந்த ஜனவரி மாதம் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்தே துரித நடவடிக்கையாக இவ் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டு செயற்பாடுகள் அனைத்தும் இடம்பெற்று வருகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் நன்மையடைகின்றமை காண முடிகிறது. (அ-3-18)







## மகாதேவனால் மகஜர் கையளிப்பு

(தும்பளை)

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும் அதைத் தடுத்து நிறுத்துமாறு கோரியும் நடைபயணம் மேற்கொண்ட மகாதேவனின் நடைபயணம் பருத்தித்துறையை வந்தடைந்ததோடு மகஜரும் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து குறித்த மீனவர் கடந்த 27ஆம் திகதி மன்னார் முள்ளி என்ற இடத்திலிருந்து நடைபயணத்தை ஆரம்பித்து கே.கே.எஸ்.வீதி வழியாக தொண்டைமானாறு பருத்தித்துறைய வந்தடைந்து பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலனிடம் மகஜர் ஒன்றை கையளித்தார்.

மகஜரை பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் உரிய தரப்பினருக்கு இவ்விடயத்தை தெரியப்படுத்துவதாகவும் இதன் பிரதி யாழ்.அரச அதிபருக்கும் வழங்குமாறு தெரிவித்தார்.

குறித்த மீனவருடன் கடற்றொழிலாளர் சவட்டுறவு சங்க சமாச தலைவர் அருள்ராஜா, செயலாளர் தம்பிராசா சந்திரதாஸ் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் இணைந்து மகஜரை கையளித்தனர். (அ-3-19)

## முகாமைத்துவ பணிப்பாளராக நியமனம்

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றிய செல்வி சி.உதயமதி எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் கரவெட்டி பிரதேச செயலகத்தில் உள்ள சமுர்த்தி மகாசங்க முகாமைத்துவ பணிப்பாளராகவும் கருத்திட்ட முகாமையாளராகவும் செயற்பட நியமிக்கப்படவுள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் கருத்திட்ட முகாமையாளராக இருந்த திருமதி டில்சன் ரவிச்சந்திரன் ஜெறின் உடுப்பிட்டி சமுர்த்தி வங்கி முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கோப்பாய் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளராக கடமையாற்றிய ந.கமிலஸ் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உள்ள வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-3-19)

# புலிகள் தயாரித்த வெடிகுண்டு மணியம்தோட்டத்தில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தயாரிப்பில் உருவான வெடிகுண்டொன்று யாழ்ப்பாணம் மணியம்தோட்டக் கடற்பரப்பிலிருந்து விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இம்மீட்புச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் மணியம்தோட்டம் பெரிய தோட்ட கடற்பரப்பில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் குறித்த கடற்பரப்பில் மீன்பிடித் தொழில் முடித்துக் கொண்டு கரைதிரும்பிய மீனவர் ஒருவரினால் குறித்த வெடிபொருள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்து நேற்றுக் காலை அங்கு சென்ற படையினர் யாழ். பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினருக்கும் தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ்.பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு பொறுப்பு அதிகாரி விக்கிரமராச்சி கடலில் அமிழ்ந்து காணப்பட்ட வெடிகுண்டினை கரைக்கு கொண்டுவருமாறு பணித்தார்.

இதனையடுத்து வெடிகுண்டு கரைக்கு கொண்டு வரப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது குறித்த வெடிகுண்டு கடலில் வீழ்ந்து குறைந்தது 2 வருடங்களே இருக்கலாம் எனவும் அது தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பில் உருவானது எனவும் மணியம்தோட்டத்தில் காணப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் கரையோர முன்னரங்க காவலரணிற்கு முன்பாகவுள்ள கடற்பரப்பிலேயே இது மீட்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வெடிகுண்டு 80 சென்றிமீற்றர் நீளமாக காணப்பட்டதோடு பிளாஸ்ரிக் குழாய் ஒன்றின் மூலமே தயாரிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட வெடிகுண்டு யாழ்.நீதிமன்றின் அனுமதியுடன் வெடிக்க வைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

## பொதுக்கூட்டம்

மாவை விக்டோறியா விளையாட்டுக் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவை ஞானவைரவர் ஆலய முன்றலில் தெல்லிப்பழை பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன், இக்கழகத் தலைவர் எஸ்.செல்வரத்தினம் ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக நீண்டகாலமாக இயங்காத நிலையிலிருந்த மேற்படி கழகத்தை மீள இயக்குவதற்காகவே இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தை சேர்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

## பாண்ட் வாத்தியக்கருவிகள் அன்பளிப்பு

யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் முன்னேற்றத்துக்கான சமூகத்திட்டத்தின் கீழ் ஆனைக்கோட்டை மகளிர் சங்கமும் காக்கைதீவு மகளிர் சங்கமும் இணைந்து யா/ஆனைக்கோட்டை பால சுப்பிரமணியம் மகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக்கருவிகளை அன்பளிப்பு செய்துள்ளனர்.

இவ் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியங்கள் நேற்றைய தினம் அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-18)

# இருபது வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

சண்டிலிப்பாய் பண்டத்தரிப்பு பிரதான வீதியிலிருந்து பிரான்பற்று ஊடாக செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் கோரிக்கை விடுத்தும் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இவ் வீதியானது புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் மழை காலங்களில் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு புனரமைக்கப்படாத வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வீதியில் 500 மீற்றர் வரை புனரமைக்கப்பட்ட போதிலும் ஒரு கிலோ மீற்றர் வரையான வீதி புனரமைக்கப்படாது பள்ளங்களுக்கு மண் இடப்பட்டு காணப்படுகிறது.

இவ்வீதியை பண்டத்தரிப்பு, சாந்தை, பிரான்பற்று, வடலியடைப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாடத் தேவைக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை புனரமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-30)

# உண்டியல் திருடியவர் வசமாக மாட்டினார்

(யாழ்ப்பாணம்)

கோவிலின் உண்டியலினை திருட முயன்ற திருடன் ஒருவரை அப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு மடக்கி பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இத்திருட்டு முயற்சி சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் கலட்டி அம்மன் கோவிலில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கோவிலின் திறந்த வெளி மண்டபத்தில் காணப்பட்ட இரும்பு உண்டியலொன்றினை உடைத்து திருட முயன்றுள்ளார்.

எனினும் உண்டியல் உடைக்கப்படாமல் போகவே உண்டியலை தூக்கிக் கொண்டு செல்ல முயன்றுள்ளார்.

இத்திருட்டின்போது உண்டியல் சத்தம் அயலவர்களிற்கு கேட்டுவிடவே அங்கு வந்த இளைஞர்கள் குறித்த திருடனை சூழ்ந்து உண்டியலை மீட்டதோடு திருடன் நல்ல கவனிப்புடன் யாழ் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (அ-4)

# சனசமூக நிலையம் இயங்கவில்லை

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை 3ஆம் கட்டை உதய தாரகை சனசமூக நிலையம் கடந்த இரண்டு வருடமாக இயங்காமல் உள்ளதாகஅப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச்சனசமூக நிலையம் இயங்காமையால் பத்திரிகைகளை வாசிக்க முடியாதுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் ஒவ்வொரு கிராமங்களிலும் பல்வேறுபட்ட நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மேற்குறித்த சனசமூக நிலையம் இயங்காமையால் இக்கிராமத்திற்கு கிடைக்காமல் போகின்றது.

இதனால் இக் கிராம அபிவிருத்தி ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகிறது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு சனசமூக நிலையம் இயங்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை அதிகமாக இணைக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறு பேறுகளுக்கு அமைய 18 புதிய பாடநெறிக ளுக்கு சில மாவட்டங்களிலிருந்து அதிக மாண வர்களை இணைத்துக் கொள்வதற்கு உயர் நீதிமன்றம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தாக்கல் செய்திருந்த நகர்த்தல் பத்திர மொன்றை பரீசீலனைக்கு எடுத்துக் கொண்ட போதே இந்த அனுமதி நேற்றையதினம் வழங்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஐயாயிரத்து 609 மாணவர்களை பல்கலைக் கழகங்களில் மேலதிகமாக இணைத்துக் கொள் வதற்கு தாம் உயர் நீதிமன்றத்தில் இணக்கம் தெரிவித்த போதிலும் அந்த பாடநெறிகளுக் காக சில மாவட்டங்களில் எந்தவொரு மாண வரும் தகுதி பெற்றிருக்கவில்லை என பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அந்த நகர்த்தல் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது.

எனவே அந்த பாடநெறிகள் 18 ற்காகவும் சில மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையி லான மாணவர்கள் தகுதி பெற்றுள்ளதாக அந்த நகர்த்தல் பத்திரத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த பாடநெறிக்கு பொரு த்தமான மாணவர்கள் அதிகமுள்ள மாவட் டங்களில் அதிகளவிலான மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-2)

# திருமலை புனரமைப்புக்கு 85 மில்லியன் டொலர்

(திருகோணமலை)

திருகோணமலை நகரம் 85 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மூலம் இந்த புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இந்தக்கடன் திட்டம் அடிப்படையில் திரு கோணமலையில் அடித்தள வசதிகள் மேம் படுத்தப்படவுள்ளன. அத்துடன் முதலீடு செய் வதற்கான ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளப் படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு இதற்கான ஒழுங்கு களை மேற்கொண்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் திருகோணமலை நகருக்கு அதிவேக வீதியை அமைக்கும் திட்டமும் முன்னெடுக் கப்படவுள்ளன. (அ-2)

## ஆங்கில செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைக ளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான வாய்மொழி ஆங்கி லச் செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக் கம் பிற்பகல் 4.30 மணிவரை ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவி த்துள்ளார்.

இச்செயலமர்விற்கு தரம் 1, தரம் 2 இல் கற்பிக்கும் ஆசி ரியர்கள் தவறாது கல ந்து கொள்ள வேண் டும் என அவர் குறிப்பி ட்டுள்ளார். (அ-3-15)


**நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்**

*3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....*



கட்டணங்கள் (1Kg) இற்கு
லண்டன் 1400/=
கனடா 2500/=
Special Rate:
ஜேர்மன் 5Kg இற்கு 5500/=
அவுஸ்திரேலியா 5Kg இற்கு 5500/=
சுவிஸ் 5Kg இற்கு 7800/=

சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/=, லண்டன் 600/=, சுவிஸ் 600/=
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

*குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்*
லண்டன். இத்தாலி. பிரான்ஸ். ஜேர்மனி. கனடா. சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
**500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!**
**3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.**

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044 (1277)

மேலதிக தொடர்புகளுக்கு:
**Rain Bow Travels**
இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 0212219596 0778710732


# ஜனாதிபதி மஹிந்த யாழ். வருகை; வீதி அபிவிருத்திப் பணிகள் தீவிரம்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யாழ்ப் பாணம் வருகையை முன்னிட்டு யாழ். நகர த்தில் உள்ள முக்கியமான வீதிகள் புனரமை க்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 12 ஆம் திகதி யாழில் நடை பெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகின்றார். அவரின் வருகையை முன்னிட்டே இந்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு யாழ். நகரத்தின் 3 கிலோமீற்றர் சுற்றளவிற்கு நிவர்த்தி செய்யப் படாமல் 2 மாதங்களுக்கு மேல் காணப்பட்டு வந்துள்ளது.

தற்போது ஜனாதியின் வருகையை முன் னிட்டு நகரத்திலுள்ள அனைத்து வீதிகளும் குறிப்பாக ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்வுகளுக்குச் செல்லும் வீதிகள் சில மூடப் பட்டும் இரவோடு இரவாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. (அ-2)

# முஸ்லிம்களின் பிரச்சினைக்கு இணைந்து தீர்வு காணுங்கள்

## அமைச்சர் ஹக்கீம் அட்வைஸ்

முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் எதிரான வன்முறைகள் மற்றும் நடவடிக் கைகள் தொடர்பான அரசாங்கத்தின் பதிலா னது தமது இணக்கத்துடனேயே தயாரிக்கப் பட்டிருப்பதாக நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமர்வின் போது முஸ்லிம்களு க்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவரினால் முன்வைக்கப்பட்ட விசேட கூற்றுக்கு அரசாங்கம் பதிலளித்ததன் பின் சபையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப் பிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண் டவாறு கூறினார்.

முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் எதிரான வன்முறைகள் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் இந்த சபையின் விசேட கூற் றினை முன்வைத்த போது அதனை நான் மிக வும் அமைதியாக இருந்து செவிமடுத்தேன்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவ ரின் குற்றச்சாட்டுக்க ளுக்கு இன்று சபை முதல்வர் பதிலளித்த போதும் அமைதியா கக் கேட்டுக் கொண்டி ருந்தேன்.

சபை முதல்வரால் வழங்கப்பட்டபதில் அறிக்கையானது எமது இணக் கப்பா ட்டு டனேயே தயாரி க்கப்பட்டதாகும். இதில் எமது கருத்து க்கள் உள்ளவாங்க ப்பட்டுள்ளன.

இவ்விடயத்தில் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டிக்கொண் டிருப்பதைவிடுத்து இரு தரப்பினரும் இணைந்து பிரச்சி னைக்கு தீர்வு காண் பதே சிறந்ததாகும் என்றார். (அ-2)


**அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

*ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கிளிநொச்சி தெற்கு சங்கானை, திருநெல்வேலி, பருத்தித்துறை, வேலணை ஆகிய கிளைகளில் 30.11.2011 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 13.02.2013 (புதன்கிழமை) 14.02.2013 (வியாழக்கிழமை) ஆகிய நாட்களில் மாலை 3 -6 மணிவரை இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.*

**உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்....**

கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500, செலுத்தி)

**அல்லது**

தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள் அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச்செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

HNB - ஹற்றன் நஷனல் வங்கி



**இவர்களுக்கு மணமகள் தேவை** **கல்யாண மாலை** **இவர்களுக்கு மணமகள் தேவை**

| | |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L<br>கம்பனி (பண்டகசாலை உதவியாளர்)<br>தொ.இ: B-1157 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>உயரம்: 6'<br>கி.பா: 27 , 4 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: Hardware Eng. (Manager)<br>தொ.இ: B -1170 |
| பிறப்பு: 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம் 4<br>உயரம்: 5'6"<br>கி.பா.:- 12, 2 இல் செவ்.<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: B -1159 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 18, 8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L<br>கணக்காளர் (டுபாய்)<br>தொ.இ: B-1171 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'6"<br>கி.பா: 9.5, 2 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L<br>அவுஸ்திரேலிய PR<br>தொ.இ: B -1163 | பிறப்பு: 1979 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>உயரம்: 5'5"<br>கி.பா: 7.5<br>தகைமை/ தொழில்: O/L<br>நகைத்தொழில்<br>தொ.இ: B -1173 |
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>உயரம்: 5'9"<br>கி.பா.:- 17.5<br>தகைமை/தொழில்: B.Scin Computing (Hons) UK Student Visa<br>தொ.இ: B -1169 | பிறப்பு: 1987 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பூரம் 4<br>உயரம்: 5'8"<br>தகைமை/ தொழில்: O/L<br>சிற்பாச்சாரி<br>தொ.இ: B -1178 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கட்டைக்காடு பிரதேசத்தில் கடலுணவு வியாபாரிகள் கைது

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் மூன்று கடலுணவு கொள்வனவு செய்யும் மொத்த வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடலில் பிடிக்கப்படும் டப்பி எனப்படும் ஒருவகை நண்டு இனத்தைக்கொள்வனவு செய்து வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு வருடத்தில் மூன்று மாதங்கள் இந்த டப்பி இன நண்டை கடற்றொழிலாளர்கள், பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் குறிப்பிட்ட சில மாதங்களிலேயே இந்த டப்பி இன நண்டுகள் சினைப்பிடித்து தமது இனப்பெருக்கத்தை மேற்கொள்வதற்காக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்துறை திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் வடமராட்சி கிழக்குப் பிரதேசம் பல வருடகாலமாக இலங்கை சட்டதிட்டங்களை மக்கள் அறிந்துகொள்ள முடியாத அளவிற்கு யுத்தத்தினால் பிரிக்கப்பட்டு இங்குள்ள கடற்றொழிலாளர்கள் தாம் நினைத்த படியே கடலில் தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

இதனாலேயே கடலில் காணப்படும் எவ்வகையான கடலுணவுகளையும் எந்தநேரத்திலும் இந்தக் கடற்றொழிலாளர்கள் பிடித்து வருகின்றனர்.எனவே இந்தப் பகுதி கடற்றொழிலாளர்களின் அறியாமைத்தனத்தைக் கருத்திற்கொண்டு கடற்றொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கடற்றொழில் தொடர்பான சட்டதிட்டங்களை இவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் உரிய திணைக்களத்தினர் விரைவாக நடவடிக்கையை மேற்கொண்டு இந்தப் பிரதேச கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென இங்குள்ள புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-3-64)

## வீரர்கள் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

மாமூலை முள்ளியவளை டயன்மன்ஸ் விளையாட்டு கழகம் மாமூலை கிராமத்தில் இருந்து மறைந்த விளையாட்டு வீரர்களின் ஞாபகார்த்தமாக 9 பேர் கொண்ட உதைபந்தாட்டம், மென்பந்து சுற்றுப் போட்டி என்பவற்றை நடத்தவுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச விளையாட்டு கழகங்களுக்கு இடையே நடத்தப்படவுள்ள இப்போட்டியில் பதிவு செய்யப்பட்ட கழகங்கள் அனைத்தும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு போட்டி நிரல் தயாரிப்பதற்கு தலைவர், செயலாளர் நிர்வாக உறுப்பினர் ஆகியோர் டயன்மன்ஸ் விளையாட்டு கழக மைதானத்திற்கு வருகை தருமாறு விளையாட்டு உத்தியோகத்தர் மாதவ ஜெயப்பிரகாஷ் அறிவித்துள்ளார். (அ-3)

## 2000 இந்து ஆலயங்கள் பதியப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இரண்டாயிரம் இந்து ஆலயங்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என அந்தத்திணைக்களத்தின் யாழ். மாவட்ட உத்தியோகத்தர் எஸ். உதயபாலன் தெரிவித்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 382 இந்து ஆலயங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும் கடந்த 2011, 2012 ஆம் ஆண்டுகளில் 2 ஆயிரம் வரை இந்து ஆலயங்கள் பதிவினை மேற்கொண்டுள்ளன.

மேலும் கடந்த வருடம் யாழ். மாவட்டத்திலுள்ள 72 இந்து ஆலயங்களுக்கு புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சின் ஊடாக தலா ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பிரதேச செயலாளர்களுக்கு எதிராக 209 முறைப்பாடுகள்

## பொ.நி.உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு

(கொழும்பு)

மக்களின் தேவைகளை சரிவர நிறைவேற்றாதது தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு எதிராக கடந்த வருடத்தில் 209 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதவிர கிராம உத்தியோகத்தர்களுக்கு எதிராக 145 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இவ்வமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் 18 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு 16 பேரிடம் விளக்கம் கோரப்பட்டும் 9 பேர் இடமாற்றப்பட்டும் உள்ளனர். அதேவேளை 75 முறைப்பாடுகள் இணக்கப்பாட்டுடன் தீர்க்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சு கூறியுள்ளது.

அமைச்சர் ஜோன் செனவிரத்தனவின் வழிகாட்டலின் கீழ் அமைச்சின் விசாரணைப் பிரிவு இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தது. இதன்படி கடந்த வருடம் அமைச்சின் விசாரணைப் பிரிவிற்கு 425 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவற்றில் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் 154 முறைப்பாடுகளும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தல், அஸௌகரியமாக நடத்தல் என்பன தொடர்பில் 101 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

கூடுதலான முறைப்பாடுகள் அநுராதபுரம், பதுளை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் இருந்தே கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முழு முறைப்பாடுகளில் 178 முறைப்பாடுகள் பொய்யானவை என விசாரணை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் ஜோன் செனவிரத்னவின் வழிகாட்டலின் கீழ் சகல மாவட்ட செயலகங்களிலும் தலா ஒரு விசாரணைப் பிரிவுகளை அமைக்கவும் புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளினூடாக விசாரணைகளை துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களினூடாக மக்களுக்கு சரியான சேவைகள் இடம்பெறாவிடின் 1905 எனும் அவசர தொலைபேசிஇலக்கத்திற்கு முறையிடுமாறு கோரப்பட்டுள்ளது.அல்லது அமைச்சின் விசாரணை மற்றும் நடவடிக்கை பிரிவு சிரேஷ்ட உதவிச் செயலாளர் டீ.எச். ஹெட்டியாராச்சிக்கு எழுத்து மூலம் வழங்க முடியும் என பொது நிர்வாக அமைச்சு கூறியது. (அ-2)

# இலங்கை வங்கியை 12 பேர் கொண்ட குழுவே தாக்கியது

(சென்னை)

சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத்திற்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக த ஹிந்து செய்தி ஊடகத் தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் தாக்குதலுக்கு இலக்கான சென்னை எக்மோர் பகுதியிலுள்ள இலங்கை வங்கியின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை வங்கியில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.டி.கமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளின் பிரகாரம் 12 பேரைக் கொண்ட குழுவினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் சென்னை எக்மோர் பகுதியிலுள்ள இலங்கை வங்கியின் அலுவலகம் மீது இனந்தெரியாதவர்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புகலிடக் கோரிக்கையாளர்கள் 6 பேர் நாடு திரும்ப விருப்பம்

அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் படகு மூலம் பிரவேசித்த ஆறு புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

தன்னார்வ அடிப்படையில் இலங்கைக்கு திரும்ப குறித்த புகலிடக்கோரிக்கையாளர்கள் விரும்பம் தெரிவித்துள்ளதை அடுத்து இவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

புகலிடக்கோரிக்கை விண்ணப்பத்தை தொடர்வதில்லை என குறித்த ஆறு இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களும் தீர்மானித்திருந்தனர்.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் படகு மூலம் புகலிடம் கோருவதில் எவ்வித நன்மையும் கிடையாது என்பதே இவ்வாறான சம்பவங்களின் மூலம் மீண்டும் மீண்டும் புலனாகின்றது என அவுஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (அ-2)




சிவபூமி பாடசாலை வளாகத்தில் மனிதநேய நிறுவனத்தலைவர் வி.கைலாசபிள்ளை தம்பதிகளால் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலையில் கடமையாற்றும் வணிகக்கல்வி, விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும், மனைப் பொருளியல் ஆகிய பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை மாங்குளத்தில் உள்ள துணுக்காய் கல்வி வலய கணனி வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.(அ-3-15)

# மொஹான் பீரிசுக்கு எதிரான மனுவை நீதியரசர் குழாம் விசாரிக்க வேண்டும்

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

**மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனு உயர்நீதிமன்றத்தின் சகல நீதியரசர்களையும் உள்ளடக்கிய குழாம் முன்னிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதே சிறந்தது என மனுதாரர் தரப்பு சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.**

அத்துடன், அரசியலமைப்பின் 119 ஆவது உறுப்புரைக்கமைய அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிபதிகள் குழாமை நியமிக்கின்ற செயற்பாடானது மனுவின் 6 ஆம் பிரதிவாதியான பிரதம நீதியரசர் மொஹான் பீரிசினால் முன்னெடுக்கப்படக் கூடாதெனவும் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் வாதிட்டார்.

மொஹான் பீரிஸ் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் மற்றும் அதன் பணிப்பாளரான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ஆகிய தரப்பினர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைகள் மனு நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட வேண்டிய நீதியரசர்களின் எண்ணிக்கை குறித்து இதன்போது வாதங்கள் முன்வைக்கப்பட்டன. மொஹான் பீரிஸ் தற்போது பிரதம நீதியரசராக இருப்பதால் நீதியரசர்கள் குழாமை நியமிப்பதற்கான அனுமதி அரசியலமைப்பின் பிரகாரம் பிரதம நீதியரசருக்கே வழங்கப்பட்டுள்ளதாக பிரதி சொலிஸ்டர் ஜெனரல் ஷவீந்திர பெர்னாண்டோ நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இந்த மனுவில் மொஹான் பீரிசிற்கு வழங்கப்பட்டுள்ள பதவி தொடர்பிலேயே ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அது தொடர்பிலான எந்தவொரு செயற்பாட்டிலும் அவர் கலந்து கொள்ளக்கூடாது என சட்டத்தரணி சுமந்திரன் பதிலளித்தார்.

மொஹான் பீரிஸ் தவிர்ந்த சகல நீதியரசர்களும் இந்த மனுவை விசாரிக்கும் நீதியரசர்கள் குழாமில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பின் நிலைப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் 132 ஆம் உறுப்புரையின் சரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீதியரசர்கள் குழாமை நியமிப்பதற்கும் இந்த மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி மீள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்வதற்கும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (அ-2)

## குறுந்திரைப்பட வெளியீடு

வவுனியா சிதம்பதஸ்லயம் நடனாலயத்தின் வெளியீடான கம்பன் எனும் கலை இலக்கிய மாத இதழ் அறிமுகமும் நம்ம ஊரு எனும்குறுந் திரைப்பட வெளியீடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு வவுனியா தம்பா விடுதியில் நடைபெறவுள்ளது. வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-250)

## மகா சபை கூட்டம்

யாழ்ப்பாணம் வண்.கிழக்கு எச்சாட்டி மகாமாரி அம்மன் ஆலயத்தின் மகாசபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆலய தலைவர் கலாநிதி க.குணராசா தலைமையில் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் மகாசபை உறுப்பினர்கள், ஆலய உபயகாரர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளு மாறு செயலாளர் பொ.மகேசலிங்கம் அறிவித்துள்ளார். (அ-9)

# மக்களின் ஆலோசனையுடன் புதிய அரசியல் சாசனம் வேண்டும்

## வலியுறுத்துகிறார் மாதுலுவே தேரர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார முறைமை ஏன் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பில் மக்கள் கேள்வி எழுப்ப வேண்டுமென கோட்டே ஸ்ரீ நாகவிகாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபிததேரர் தெரிவித்துள்ளார். தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

தற்போதைய அரசியல் அமைப்பை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மதத் தலைவர்கள் மற்றும் பொதுமக்களின் ஆலோசனையுடன் புதிய அரசியல் சாசனமொன்றை உருவாக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார முறைமையினால் நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பும் அரசியல் முறைமையும் பலவீனமடைந்துள்ளன. முறைப்பாட்டாளரே விசாரணை நடத்தி தண்டனை வழங்கும் ஆசியாவின் ஆச்சரியம் இலங்கையில் இடம்பெறுகிறது.

தற்போதைய முறைமையின் கீழ் ஜனாதிபதி நீதிமன்றத்தை எந்த வகையிலும் மதிப்பதில்லை. 18 ஆம் திருத்தச் சட்டம் நாட்டின் ஆட்சி முறைமையை பாதக நிலைக்கு இட்டுச் சென்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மத சுதந்திரத்தை பாதுகாக்க அரசு முனைப்புடன் செயற்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டில் சகல இனம் மற்றும் மதங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சக வாழ்வையும் கட்டியெழுப்பவும் சகலரது மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதிலும் அரசாங்கம் முனைப்புடன் செயற்படுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள சகல பௌத்த மத பீட மகாநாயக்க தேரர்களையும் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சந்தித்துக் கலந்துரையாடிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் மதங்களுக்கிடையில் ஒற்றுமையையும் கட்டியெழுப்பி அபிவிருத்தியில் நாட்டை முன்னேற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளுக்குத் தாம் பூரண ஒத்துழைப்பு வழங்கு வதாக மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

முப்பது வருட பயங்கரவாதத்தை இல்லாதொழித்ததற்கான கௌரவம் ஜனாதிபதிக்கே உரித்துடையது. இந்த நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் செயற்பாடும் ஜனாதிபதியினால் மட்டுமே முடியும் எனவும் இச் சந்திப்பின் போது அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி பௌத்த தர்மத்தைப் பாதுகாப்பதிலும் பலப்படுத்துவதிலும் அரசாங்கம் எப்போதும் கடமைப்பட்டுள்ளது. நாட்டின் சகல இன, மத, சக வாழ்வைக் கட்டியெழுப்பவும் சகலரதும் மத சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஒருவர் வரலாற்றில் அனைத்து பௌத்த மத பீட நாயக்க தேரர்களையும் அழைத்து இவ்வாறு பேச்சுவார்த்தை நடத்திய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# காலனித்துவ சூழ்ச்சிக்குள் இலங்கை செல்கிறது

## தம்பர அமில தேரர்

நாட்டை மீளவும் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்க முயற்சிக்கப்பட்டு வருவதாக காலனித்துவ ஆட்சிக்கு எதிரான அமைப்பின் அமைப்பாளர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

1815 ஆம் ஆண்டில் நாடு எதிர் நோக்கிய காலனித்துவ சூழ்ச்சிகளுக்கு நிகரான சூழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண இன, மத, கட்சி பேதங்களைக் களைந்து அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும்.

காலனித்துவ சக்திகளை நாட்டுக்குள் அனுமதித்து நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்வோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தம்பர அமிலதேரர் தெரிவித்துள்ளார். கொழும்பு ஹைட் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கற்கை நெறிகள் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொழில்பயிற்சி அதிகார சபையினால் (NAITA) தகவல் தொழில்நுட்பம், தொழிற்சாலை மின்னியலாளர் கற்கை நெறிகளுக்கு ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படவுள்ள இக் கற்கை நெறிகளில் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை பயில க.பொ.த (சா.த) பரீட்சையிலும், க.பொ.த (உ/த) பரீட்சையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழிற்சாலை மின்னியலாளர் கற்கை நெறியை பயில க. பொ. த(சா/த) பரீட்சையிலும் தோற்றியிருக்க வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு 0212285615 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளுமாறு மாவட்ட முகாமையாளர் ஏ.பி அல் பிரட் அறிவித்துள்ளார். (அ)



இணுவில் கலைஒளி மன்றத்தினால் யா/ இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு பாடசாலைக்கான சிறுவர் நூலகம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட நூலகம் திறந்து வைக்கப்படுவதையும் ஆரம்பப் பிரிவு சிறார்களையும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

364

# அகம்பாவம்



வெகுகாலத்திற்கு முன் குமுத மகரிஷி என்பவர் மகாவிஷ்ணுவை நோக்கி கடும் தவம் புரிந்தார். மகாவிஷ்ணுவும் லட்சுமியுடன் அவர் முன்தோன்றி என்னவரம் வேண்டும்? என்று கேட்டார்.

குமுதன் மகாவிஷ்ணுவை தரிசிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடுதான் தவம் புரிந்தார். ஆனால் திடீரென விஷ்ணு என்ன வரம் வேண்டும் என்று கேட்கவே திக்குமுக்காடினார்.

லட்சுமி குமுதரிஷியின் நிலையை ஒருவாறு புரிந்துகொண்டு பக்தா நீ அவசரப்பட்டு வரம்கேட்க வேண்டாம். நாங்கள் ஒருமாத காலம் கழித்து மறுபடியும் காட்சி அளிக்கிறோம். அதற்குள் நன்கு யோசி த்து வரத்தைக் கேள் என்றாள்.

குமுதரிஷிக்கும் படபடப்பு அடங்கியது. இதற்குள் லட்சுமியும் விஷ்ணுவும் மறைந்தனர். குமுதரிஷியோ தன் தவம் பலித்ததே என்று சந்தோஷமடைந்தார். தன் ஆசிரமத்திற்குப் போய் சிஷ்யர்களிடம் நடந்ததைக்கூறினார்.


இதைக்கேட்டு அவர்கள் ஆஹா மகா விஷ்ணுவே வரம் கேட்கச் சொல்லியும் ஒன்றும் கேளாமலிருந்த உங்கள் தியாகமே தியாகம். ஈரேழு

## அம்புலிமாமா கதைகள்

பதினான்கு உலகத்திலும் உங்களுக்கு இணை யாருமே கிடையாது என்றெல்லாம் புகழ்ந்தார்கள். இதைக் கேட்டதும் குமுதரிஷிக்கு தன்னைவிட சிரேஷ்டமான மகரிஷி எங்கும் இல்லையென்ற நினைப்பு ஏற்பட்டது.

ஒருநாள் சிஷ்யர்களுடன் அவர் கங்கைநதியில் குளிக்கச் சென்றார். அப்போது ரைவதன் என்னும் அரசன் கங்கையில் குளித்துவிட்டு இவர்களுக்கு எதிரே வந்து கொண்டு இருந்தான். கூடவே மனைவியும் பத்து குழந்தைகளும் இருந்தனர். இதைக்கண்டு சிஷ்யர்கள் அவர் மாயநேமி மகரிஷியோ என சந்தேகம் கொண்டு தங்கள் குரு குமுதரிஷியிடம் கேட்டனர்.

அதற்கு அவர் இந்த ரைவதன் எப்படி மகரிஷி என்ற பட்டத்தை அடையமுடியும்? எல்லாவற்றையும் தியாகம் செய்து இலைகளை புசி த்து கடுந்தவம் செய்வோருக்கே பகவான் தரிசனம் அளிப்பார். இவர் மாதிரி பேர்வழிகளுக்கு அளிக்கமாட்டார் என்றார். ஆனால் குமுதரிஷிக்கே தான் அளித்த பதில் சரியல்ல என்று பட்டது. சரி, இதற்கான விடையை மகாவிஷ்ணு மீண்டும் காட்சி அளிக்கும்போது கேட்டுத்தெரிந்து கொள்



ளலாமென்று நினைத்துக் கொண்டார். ஒருமாத காலமும் கழிந்தது.


மகாவிஷ்ணுவும் லட்சுமியும் குமுதரிஷிக்கு காட்சியளிக்கவே வரம் கேட்க மறந்துபோய் ரைவத ராஜரிஷியைக் குறித்து தனது சந்தேகத்தைக் கேட்டார். அதற்கு விஷ்ணு, குமுதா எனக்கு பக்தியே பிரதானம். வெறும் தவம் செய்தால் மட்டும் போதாது. மனம் பரிசுத்தமாக இருக்கவேண்டும். நீ ஸ்ரீசைலத்திற்கு அருகிலுள்ள சுவர்ண கிருஹத்திற்குப் போ. அங்குள்ள சுதர்மன் என்பவன் உன் சந்தேகத்தைத் தீர்ப்பான் என்று கூறினார்.

குமுதரிஷி தன் சிஷ்யர்களுடன் ஸ்ரீசைலத்திற்குச் சென்றார். ஒரு நாள் காலை அங்குள்ள பாதாள கங்கையில் குளிக்கச் சென்றார். சிஷ்யரும் கூடவே சென்றனர். எல்லோரும் குளித்துக் கரை ஏறினர். ஆனால் குமுதரிஷி கடைசியில் கரையேறும் போது ஒரு முதலை பலமாக அவரது காலைப்பிடித்துக் கொண்டது.

இதைக்கண்ட சிஷ்யர்கள் ஓவென்று கத்தினார்கள். ஆனால் குமுதரிஷியோ கோபமாக அந்த முதலையைப் பா[illegible] வலிமையா[illegible] அந்த [illegible]திலேயே உயிரை இழந்து விட்டது. இதனால் குமுதரிஷிக்கு இன்னும் கர்வம் தலைக்கேறியது. ஓரிரண்டு நாட்களுக்குப்பின் குமுதரிஷி சுவர்ண கிருஹத்திற்குச் சென்றார். அப்போது சுதர்மன் வீட்டிலில்லை. அவன் மனைவி ஒரு பழம் புடைவையின் கிழிசலைத் தைத்துக் கொண்டிருந்தாள். குமுதனைப் பார்த்ததும் தன் கணவன் வரும் வரை வெளியே திண்ணையில் உட்கார்ந்திருக்கும் படி சொன்னாள்.

குமுதரிஷிக்குக் கடும்கோபம் ஏற்பட்டது. தனக்குச் சரியான மரியாதை கொடுத்து உபசரிக்கவில்லையே என்று கோபம் கொண்டு கதவின் ஓரமாக உட்கார்ந்திருக்கும் சுதர்மனின் மனைவியை கோபத்துடன் பார்த்தார். ஆனால் முதலை கீழே விழுந்து இறந்தது போல அவள் இறக்கவில்லை. இதனால் குமுதரிஷிக்கு தன் சக்தியின் மீதுள்ள நம்பிக்கை சிறிது குறைந்தது. இதற்குள் சுதர்மன் அங்கு வந்திருந்த விருந்தாளிகளை உணவருந்த அழைத்தான். சமையல் ஆனதும் சுதர்மனின் மனைவி எல்லோருக்கும் உணவு பரிமாறினாள்.

குமுதரிஷி முதலில் உட்கார்ந்து இருந்தார். பரிமாறப்பட்ட உணவு



சில்லென்று ஆறியிருந்ததைக் கண்டு அவர் கோபம் கொண்டார். ஏளனமாக அடடா என்ன சூடு! பொறுக்க முடியவில்லையே என்றார் சுதர்மனிடம்.

சுதர்மனுக்கு குமுதன் கேலி செய்வது தெரிந்தது. சுவாமி அப்படி [illegible] இந்த விசிறியால் வீசி [illegible]கிறேன் என்று வீச ஆரம்பித்தார். மறுகணமே ஆறிப்போய் இருந்த சாதம், கறி முதலியவைகளிலிருந்து சூடான ஆவி கிளம்பியது. இதைக்கண்டு குமுதரிஷி வெட்கம் அடைந்தார். பேசாமல் சாப்பிட்டு எழுந்தார்.

கைகழுவ கிணற்றின் அருகே சென்றபோது மற்றொரு ஆச்சரியமான காட்சியைக் கண்டார். கிணற்றின் உருளையின் மீது கயிறு இருக்கிறது. கட்டிவிடப்பட்ட பாத்திரம் அந்தரத்தில் அப்படியே தொங்கிக் கொண்டிருக்கிறது. யாரும் கயிறின் மறுநுனியைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை.

தண்ணீர் இழுத்துக் கொண்டிருக்கையில் இவர் கூப்பிடவே அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்தேன் என்றாள் சுதர்மனின் மனைவி ஆச்சரியப்பட்டுக் கொண்டு நிற்கும் குமுதமகரிஷியிடம். தன்னைவிட மிஞ்சியவர் யாரும் இல்லையென்று நினைத்த குமுதரிஷிக்கு இதைக்கண்டதும் கர்வபங்கம் ஏற்பட்டது. உடனே சுதர்மனைக்கைகூப்பி வணங்கி சுதர்மா நீங்கள்தாம் உயர்ந்தவர். தவம் செய்யாமல்கூட மோட்சத்தை அடைய வழி இருக்கிறதா? என்று கேட்டார்.

அதற்கு சுதர்மன் குமுதரே! தவம் செய்துதான் முக்தியை அடையமுடியும் என்றால் ஏரி, குளம், குட்டைகளில் ஒற்றைக் காலில் நின்று மீனுக்காகத் தவம் செய்கிறதே. அந்தக் கொக்குக்கூட முக்தியை அடையும். காய், கனிகளை உண்பது, தவம் செய்வது ஆகியவை முக்தியை அடைவதற்கான வழிகளே தவிர அவை முக்தியை அளிக்கும் என்ற அவசியமே இல்லை. தூய மனத்துடன் கடவுளை நினைத்து வேண்டினாலே முக்தியை அடையமுடியும். அது என்னைப் போன்ற சம்சாரிகளினாலும் செய்ய முடியும். ஆகவே முதலில் முக்தியைப் பெறுவது எப்படி என்று தெளிவு பெறுங்கள். உங்கள் அகம்பாவத்தை விட்டொழித்து மனத்தை

பரிசுத்தம் ஆக்கிக் கடவுளிடம் தியானம் செய்யுங்கள். அதுவே முக்தி அடையும் வழி என்றாள்.

இதைக்கேட்டதும் குமுதரிஷியின் அகந்தை அழிந்தது. அது முதல் தூய மனதுடன் பகவானைத் துதித்தார். முடிவில் மோட்சத்தையும் அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் பெயர் ரீமா கங்கோபாத்யாய என்றது" இன்னொரு திடீர்க் குரல். அந்தப் பருத்திப்புடைவை மீது பாய்ந்தன எல்லாக் கண்களும்.

"கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் வேளாண் விஞ்ஞானி நான். எனக்கொரு கேள்வி. புவி வெப்பமாகிறது என்பது உண்மை. ஆனால், அதற்கு மனிதர்கள் காரணமில்லை என்பது இன்னொரு பேருண்மை. பூமி என்பது ஓர் உயிரி என்றார் விஞ்ஞானி ஜேம்ஸ் லவ்லாக். அது தன்னைத்தானே வடிவமைத்துக் கொள்ளும் தகுதி மிக்கது என்றும் சொன்னார். அதனால் புவிவெப்பம் பூமியை பாதிக்கும் என்று நான் நம்பத் தயாராயில்லை. புவிச்சூடு என்பது அறிவு ஜீவிகளின் பிழைப்புக்கான இன்னொரு தலைப்பு"

எமிலி பதில் சொல்லத் தொடங்கு முன் ஓர் இடதுசாரிக் குழு எழுந்தது.

"மனிதர்கள்தான் பூமியைச் சுடகள் வழிமொழிந்திருக்கக்கூடும்.


கருத்து ஒரு தீப்பொறி. இது யாடமிருந்தும் பற்றலாம். தீக்குச்சிகள் உரசிப் பற்றாமலும் போகலாம்; மூங்கில்கள் உரசியும் மூண்டுவிடலாம். தீக்குச்சிக்கு மட்டுமே சொந்தமில்லை நெருப்பு; தீக்கடை கோல்களுக்கும்தான். உங்களில் யாரையும் புண்படுத்துவது என் நோக்கமல்ல. ஆனால், உண்மை வலித்தால் அதற்கு நான் பொறுப்பல்ல.

புவிவெப்பமாதல் பொய் என்ற கூற்றை மென்மையான வார்த்தைகளால் வன்மையாக மறுக்கிறேன். கொல்கத்தா சீமாட்டியின் கேள்விக்கு ஒரு பதில் வைத்திருக்கிறேன். பூமி ஓர் உயிரி- அது தன்னைத் தானே சமன் செய்துகொள்ளும் தகுதி மிக்கது என்று ஜேம்ஸ் லவ்லாக் சொன்னது உண்மைதான். ஆனால், அது மாஜி உண்மை. அந்த வரம்புகளைத் தாண்டி பூமி வெகுதூரம் போய்விட்டது என்று அப்புறம் சொல்லியிருப்பதும் அவரேதான்.

மாய்ப் பூக்கிற அப்பிள் மலர்கள் மழையால் துடைக்கப்பட்டு விடுகின்றன- தென்னிந்தியாவின் மாந்தோப்பு மலர்களைக் காலம் தப்பிய மழை கழுவி விடுவது மாதிரி. பயிர்களில் தங்கம் வளர்க்கும் பஞ்சாபில் ஒரு டிகிரி வெப்பம் கூடியதில் 4.5 மில்லியன் தொன் குறைந்து விளைகிறது கோதுமை.

➢ வடக்கே கோதுமை- தெற்கே நெல். இதுதான் இந்தியாவின் தானியக் கலாசாரம். நூறு நாட்களில் நான்கு பருவங்கள் வேண்டும் தமிழ்நாட்டு நெல்லுக்கு. ஒருமழை- ஒருகுளிர் ஒருபனி- ஒரு வெப்பம் என்ற நான்கு பருவங்கள் நிலை கொண்டுள்ளன ஒரு நெல்மணியில். ஆனால், புவிச்சூட்டில் பருவங்கள் மாறிப்போனதில் தலைசுற்றிப் போனான் தமிழ்நாட்டு விவசாயி. கடைசியில் மனிதனுக்கு நட்ட நெல் மாட்டுக்கும் தேறவில்லை.

➢ மகாராஷ்டிரா மாநிலம் விதர்பாவிலிருந்து வருகிறேன். என்னை மன்னிக்க




க்கு உயிரை ஒட்டி வைக்க ஒரு பருக்கை இருக்காது.

➢ புவிச்சூடு ஆண்டுக்கு மூன்று இலட்சம் மக்களைக் கொன்றுவிட்டுப் போகிறது.

➢ 85 கோடி மக்கள் ஊட்டச் சத்தில்லாமல் வாழ்கிறார்கள் உயிரைப் பிடித்து.

உலகத்தின் பத்துக்கோடி மக்கள் கடல்மட்டத்திலிருந்து மூன்றடி உயரத்தில்தான் வாழ்கிறார்கள்.

➢ இப்போதுள்ள கடல்மட்டம் மூன்றடி கூடினால் வங்கதேசத்தில் ஏழுகோடி மக்கள் இடம்பெயர நேரிடும். புவிச்சூடு கட்டுப்படுத்தப்படாவிட்டால் இது நேரவே நேரும்.

➢ எமிலி மொழியில் சொல்வதானால் இயற்கைக்கெதிராக மனிதன் தொடுத்துவிட்ட மூன்றாம் உல்கப்போர் மூண்டுவிட்டது.

➢ ஆயுதங்கள் தலைமை தாங்கும் மூன்றாம் உலகப்போர் மூண்டிருந்தால் மானுடம் இருக்காது. இப்போது மூண்டிருக்கும் இந்த மூன்றாம் உலகப்போரை நிறுத்தாவிட்டால் மண்ணகமிருக்காது.

அன்புகூர்ந்து விழித்துக் கொள்ளுங்கள்; அதற்குமுன் இந்த அழையாவிருந்தாளியை மன்னித்துக்கொள்ளுங்கள்.

மீண்டும் உடம்பைத் தட்டையாக்கி வணங்கினான் இஷிமுரா.

ஓர் அனிச்சைச் செயலாக ஒட்டுமொத்த அரங்கமும் எழுந்து நின்று கை தட்டியது. கலகம் செய்தவர்களும் கை தட்டிக் கொண்டார்கள் ஓசையில்லாமல். ஒரு புலிபோல் தாவி மேடை ஏறினான் சின்னப்பாண்டி. இஷிமுராவைக் கட்டியணைத்துச் செந்தூக்காகத் தூக்கினான்.

"என்னை உயரமாக்கிவிட்டீர்கள்" என்றான் இஷிமுரா.

"உயர்த்தாமலே நீங்கள் உயர்ந்தவர்தான்" என்றான் சின்னப்பாண்டி.

"இருவரும் சேர்ந்து என்னைக் குட்டையாக்கிவிட்டீர்கள்" என்றாள் எமிலி.

அரங்கம் கரவொலியால் நிரம்பி வழிந்து கொண்டிருந்த வேளையில் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்களின் காதுகளோடு எதையோ கலந்துரையாடிக் கொண்டிருந்த துணைவேந்தர், கரவொலி தேய்ந்தடங்கத் தொடங்கிய போது ஒலிபெருக்கியோரம் ஒதுங்கினார்.

ஓர் இனிய அறிவிப்பு. ஆட்சி மன்றக் குழுவின் அனுமதியோடு இதை அறிவிக்கிறேன். எமிலியும் இஷிமுராவும் அவர்களால் முடியும் வரை அல்லது

# மூன்றாம் உலகப்போர்

**40**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

வைக்கிறார்கள் என்கிறீர்கள். அப்படிப் பார்த்தால் எரிசக்தி எரித்துக் கரியமில வாயுவால் ஓசோன் கூரை கிழிக்கும் பட்டியலில் ஆறாம் இடத்தில்தான் இருக்கிறது இந்தியா; முதல் இடத்தில் இருக்கிறது அமெரிக்கா. நீங்கள் அறிவுறுத்த வேண்டியது அமெரிக்காவுக்குத்தான். இந்தியாவுக்கு அல்ல" இடதுசாரிகள் இதயத்திலிருந்து தர்ன் சொன்னார்கள். அதனால் கருத்தரங்கில் பலபேருக்கு திடீர் நாட்டுப்பற்று தீப்பற்றி எரிந்தது.

"இந்தியாவை இழிவு செய்யாதே!" அமெரிக்கப் பெண்ணே திரும்பிப்போ!"

ஆங்காங்கே வெடித்தன ஆயத்த கோஷங்கள்.

ஒரே குழப்பம்... காந்தி கிராமத்தில் கோட்சே புகுந்த மாதிரி. தன் தடம் இறங்கிக் கூச்சலின் பள்ளத்தாக்கில் கவிழ்ந்துவிட்டது கருத்தரங்க ரயில்.

"நான் கேள்வி கேட்க அல்ல. பதில் சொல்லவே ஆசைப்படுகிறேன்" அத்தனை கூச்சலுக்கு மத்தியிலும் மெத்தப் பணிவாக ஆனால், அழுத்தமாக ஒலித்தது ஓர் அந்நியக் குரல்.

அந்த வித்தியாச மனிதனின் உடல் மொழியால் ஈர்க்கப்பட்ட துணைவேந்தர், நீங்கள் மட்டும் மேடைக்கு வரலாம் என்று அதிகாரபூர்வமாக அழைத்தார்.


அந்த மஞ்சள் மனிதன் மேடைக்கு வந்தான்; உடலைத் தட்டை செய்து சபையை வணங்கினான்.

சுடுமணலில் விழுந்த ஒற்றை மழைத்துளியாய்ச் சட்டென்று வற்றிப் போனது சப்தம்.

"என் பெயர் இஷிமுரா- ஜப்பானியன், விஞ்ஞானம் படித்த ஒரு விவசாயி மகன். அண்மைச் சுனாமியில் தாய், தந்தை இழந்தவன். ஆனால், அநாதை அல்ல. புத்தரோடு நானிருக்கிறேன். என்னோடு புத்தரும் இருக்கிறார். பேரறிவாளர்களே...! என் ஆங்கிலத்தில் பிழை இருக்கலாம்; கருத்தில் இருக்க முடியாது என்று நம்பிகிறேன். என் தாய் மொழியில் நான் பேசுவது எனக்கு ஜப்பானில் சைக்கிள் ஓட்டுவது மாதிரி; ஆங்கிலத்தில் பேசுவது இந்தியாவில் நான் கார் ஓட்டுவது மாதிரி; என் மொழியை நிராகரித்துவிட்டுக் கருத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

அந்த அழகிய அமெரிக்கப்பெண்ணின் கருத்துக்கு நீங்கள் இன்னும் கொஞ்சம் காது கொடுத்திருக்கலாம். நீங்கள் மறுத்தது எமிலியின் கருத்தை அல்ல; அவள் வயதை. இதே கருத்தை ஒரு மூதாட்டி முன்மொழிந்திருந்தால் நீங்

துருவப் பனிகள் உருகப் பத்தாயிரம் ஆண்டுகள் ஆகுமென நம்பினார் லவ்லாக். ஆனால், பனிப்பாறைகளில் விழுந்த விரிசல் கடைசியில் அவர் நம்பிக்கையிலும் விழுந்து தொலைத்தது. 1.4 டிகிரி செல்சியல் வெப்பநிலை வரைக்கும்தான் சமன் செய்து கொள்ளும் சக்தி படைத்திருக்கும் பூமி. அது 2 டிகிரி செல்சியஸை



எட்டி விட்டால் எதிர்ப்புச் சக்தியை இழந்து விடும். பூமியின் கிரீடம் மட்டுமல்ல; கபாலம்கூடக் கழன்று விடும். இந்தியாவின் வடக்கே பயணித்துவிட்டுத் தெற்கு நோக்கித் திரும்பியிருக்கிறேன். புவிச் சூடு இந்தியாவை எப்படி யெல்லாம் தடம் மாற்றிப் போட்டிருக்கிறது என்பதற்குச் சான்று சொல்கிறேன்.

➢ உத்தரகாண்ட்டிலும் இமாச்சல பிரதேசத்திலும் பனியும் மழையும் குறைந்ததால் 9000 அடியில் விளைந்த அப்பிள் தோட்டங்கள் 12000 அடிக்கு மலையேறி விட்டன.

➢ எங்கள் நாட்டில் யாருமே நினைக்கவில்லை- இமயமலை அடிவாரத்தில் மின்விசிறிகளுக்கான சந்தை ஒன்று தோன்றும் என்று.

➢ மழைக்காலம் ஏப்ரலுக்கு மாறிப் போனது. அதை அறியாமல் வழக்க

வேண்டும்- என் இதயத்தைப் பிடித்துக் கொண்டு இதைச் சொல்லுகிறேன். உணவில்லாதவன் செத்துப்போன தேசங்களைப் பார்த்திருக்கிறேன். உணவு தருகிறவன் செத்துப் போவதை இங்குதான் பார்க்கிறேன். வெடித்த பருத்திக்கு விலை இல்லை என்பதனால் தற்கொலை செய்து கொண்டார்கள் விதர்பா விவசாயிகள்.

ஏன் விலையில்லை? உலக வர்த்தக அமைப்பின் புதிய கொள்கைகள் உறிஞ்சி விட்டன அவர்கள் உயிரை. வளர்ந்த நாடுகள் தங்கள் விவசாயிகளுக்குக் கொடுத்த மானியத்தால் சர்வதேசச் சந்தையில் சரிந்துவிட்டது பருத்தி விலை. விலையில்லாத இந்தியப் பருத்தி வெடிக்கும் போதே கறுப்பாக வெடித்தது. அது ஆயிரக்கணக்கில் விவசாயிகள் உயிரைக் குடித்தது. கடைசியில் இந்தியாவில் வழங்கப்பட்ட குறைந்த மானியம் பயன்பட்டது மரணச் செலவுக்கு.

➢ இந்தியா மட்டுமல்ல உலகமே புவிச் சூட்டில் உருகத் தொடங்கிவிட்டது இதோ. என் கைத்தொலைபேசியில் பதிவாகியிருக்கும் உலக உண்மைகளைச் சொல்லப் போகிறேன் உங்களுக்கு.

➢ 2050 இல் இன்னும் இருபத்துமூன்று கோடி மக்கள் புதிதாக வரப் போகிறார்கள் பூமிக்கு. ஆனால், மூன்று சதவிகிதமாக இருந்த உலக தானிய உற்பத்தி இன்று ஒரு சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது.

➢ உணவுப் பிரச்சினைதான் இங்கு உயிர்ப் பிரச்சினை என்று எமிலி சொன்னதில் என்ன பிழை? ஆப்பிரிக்காவின் மண்ணின் வளம் இப்போது வீழும் விகிதத்தில் விழுந்து கொண்டே போனால் 2025 - இல் இருபத்தைந்து சதவிகித மக்களு

# கருத்து ஒரு தீப்பொறி...!
# அது யாரிடமிருந்தும் பற்றலாம்

அவர்கள் விசா முடியும் வரை எங்கள் பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியர்களாகப் பணியாற்றலாம். இந்தக் கருத்தரங்கம் முடிவதற்குள் முறையான ஆணை வழங்கப்படும்.

மீண்டும் கரவொலி திரண்டது.

சின்னப்பாண்டி- எமிலி- இஷிமுரா மூவரின் உதடுகளிலும் ஒரே புன்னகை ஓடி முடிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான உதவிகள்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதை நெல், உரம் ஆகியன இலவசமாக வழங்கப்படு மென விவசாய அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பாக சகல மாவட்ட விவசாய சேவை அலுவலங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சின் இவ்வறித்தலுக்கமைய வெள்ளத்தால் அழிவுகளை முழுமையாகவோ பகுதியளவிலோ எதிர்நோக்கிய அனைத்து விவசாயிகளினதும் விவசாய நிலங்கள் தொடர்பான கணக்கெடுப்புகளை பிரதேச கமநல சேவை மத்திய நிலைய்ங்கள் ஊடாக விவசாய திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பயிர்க் காப்புறுதி சபையில் தமது விவசாய நிலங்களை காப்புறுதி செய்தோருக்கு முழுமையான காப்புறுதி பணமும் பயிர்க் காப்புறுதியினை மேற்கொள்ளாதோருக்கு இலவச விதை, நெல் இலவச உரம் என்பன வழங்கப்படவுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சம் ஏக்கர் நெற்காணிகள் முற்றாக சேதமாகியுள்ளன. இதில் மிகக்கூடுதலான அழிவினை மட்டக்களப்பு மாவட்டமும் இரண்டாவதாக அம்பாறை மாவட்டமும் எதிர்நோக்கியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 46 ஆயிரம் ஏக்கர் நெற்காணியும் அம்பாறை மாவட்டத்தில் 34 ஆயிரம் ஏக்கர் நெற்காணியும் விளைச்சல், அறுவடை காலத்தில் பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அழிவு காரணமாக நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் சுமார் 32 வீதமான இழப்பு ஏற்பட்டுள்ளதுடன் மாகாணத்தில் 60 வீதமான நெல் உற்பத்தியில் பாதிப்பும் ஏற்பட்டுள்ளதாக விவசாயத்திணைக்கள உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளின் கவனயீனத்தால் ஏற்படும் அழிவுகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வகையில் சேதமடையும் விவசாயிகளின் வயல் நிலங்களை செப்பனிட்டு கொடுக்கும் பணிகளை நீர்ப்பாசன திணைக்களம் பொறுப்பேற்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் அண்மையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 5 மணி முதல் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் ஆகிய நிகழ்வுகளை மண்டலாபிஷேகத்தினத்தையொட்டி நடத்தவுள்ளது.

இதில் அடியார்களை பங்குபற்றி பயன் பெறுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி கேட்டுள்ளார். (அ)

## பாடசாலைக்கு வர்ணம் பூச தேங்காய் பறித்த மாணவன்

### பூதாகரமானது விடயம்

(கொழும்பு)

பாடசாலைக்கு வர்ணம் பூசுவதற்கு பணம் தேடுவதற்காக அயல் வளவில் தேங்காய் பறித்து நீதிமன்ற தீர்ப்புக்குள்ளாகியுள்ள மாணவன் தொடர்பில் அமைச்சரவையினால் ஜனாதிபதியின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு வர்ணம் பூச அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்கும் போது மாணவர்களிடம் பணம் கோரப்படுகிறதா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், பந்துல குணவர்த்தன ஆகியோருக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது ஒரு மோசமான செயல் எனவும் சம்ப்ந்தப்பட்ட பாடசாலையின் அதிபரை பதவி விலக்குவதற்கு கல்வியமைச்சருக்கோ அமைச்சின் செயலாளருக்கோ அதிகாரமில்லாத நிலையே சட்டத்தில் உள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பில் தெரிவித்த அமைச்சர், இணைக்க சபை மூலம் இதற்கு தீர்வு காண்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார். (அ-2)

## ஆட்கடத்தல்காரர்களுக்கு பல பில்லியன் டொலர்கள்

(கொழும்பு)

ஆட்கடத்தல்காரர்கள் வருடாந்தம் 32 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை இலாபம் ஈட்டுவதாக சர்வதேச தொழிலாளர்கள் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் டொங்லின் லீ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்கடத்தல் மற்றும் பலவந்தமாக தொழிலில் அமர்த்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அறிக்கையிடலுக்கான வழிகாட்டல் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இந்த வழிகாட்டல் நூலை வெளியிட்டது.

உலகில் சுமார் 24 மில்லியனுக்கும் அதிகமானோர் கடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச தொழிலாளர்கள் ஸ்தாபனத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## பேருந்துகளில் பிச்சையெடுத்தல் தடை; போதிய சட்ட நடைமுறை இல்லை

### த.பே.உரிமையாளர் சங்கம்

பேருந்துகளில் பிச்சையெடுத்தல் மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுதல் என்பவற்றைத் தடைசெய்யும் செயற்பாட்டின் போது போதுமானளவு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளில் பொலிஸாரின் பங்களிப்பு குறித்து திருப்தியடைய முடியாதுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பேருந்துகளில் இடம்பெறும் இந்த நடவடிக்கைகளின் மூலம் ஏற்படுகின்ற சிரமங்கள் குறித்து பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119 இற்கு அழைப்பை ஏற்படுத்துகின்ற போதிலும் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதில்லை என பயணிகளிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான பிரிஷாந்த ஜயக்கொடி தெரிவிக்கையில், முறைப்பாடுகள் கிடைக்கின்றபட்சத்தில் உடனடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொலிஸார் தயாராக இருக்கின்றனர் என்றார். (அ-2)

## தலைமைத்துவப் பயிற்சியின் மூன்றாம் கட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு உயர்கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியன இணைந்து முன்னெடுக்கும் தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையின் மூன்றாம் கட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி பட்டறையின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் 22 பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள 7 ஆயிரத்து 38 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விபரங்களையும் தலைமைத்துவ பயிற்சி பற்றிய தகவல்களையும் www.leadership.mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை பயிற்சிகளில் இதுவரையில் கலந்து கொள்ளாத மாணவர்களுக்காக நான்காம் கட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களை 0112 399 314 அல்லது 0112 435 306 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் அடிப்படைச்சிங்கள மற்றும் அடிப்படை தமிழ் சான்றிதழ் கற்கைநெறி 2012/2013 கல்வியாண்டிற்கான தரப்படுத்தல் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ்.பல்கலைக்கழக பரீட்சை மண்டபங்களில் நடைபெறும்.

இப்பரீட்சையை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்தத் திட்டமிட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)



***ஷாலினி சாள்ஸின் உனக்காக*** எனும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் நல்லூர் தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் பி.ஈஸ்வரராஜா மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கவிதை தொகுப்பின் முதல் பிரதியை யாழ்.பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவிடமிருந்து யாழ் ரில்ஹோ விருந்தினர் விடுதியின் உரிமையாளர் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர். கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இலங்கை வரலாற்றில் ஒரு மைல்கல்



ஜீ.ஜீ.பொன்னம்பலத்தைப் பற்றி நான் (தொகுப்பாளர்) கூறுவதிலும் பார்க்க அவரைப் பற்றி அவருக்கு எதிராகக் கருத்துக் கூறியவர்கள் உண்மையை உணர்ந்து வெளிப்படுத்திய உரைகளை ஆதாரமாக வெளிப்படுத்த விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக செயலாளர் நாயகம், வ.நவரத்தினத்தால் எழுதப்பட்ட **தமிழ் தேசியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்** என்ற நூலில் கூறியிருப்பவை வருமாறு,

"என்னைப் பல வழிகளிலும் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் மன்னிக்க முடியாது. ஏனெனில் அவருடைய கருத்துக்கு மாறாக பல வருடங்களாக அவருக்கு எதிராகப் பேசினேன்"

"என்றாலும் உண்மையை கூறும் போது அவரின் நேர்மையும் மாறாத்தன்மையும் தன்னலம் பற்றி ஆணவம் கொண்ட அவரது உண்மை நிலையை வெளிக்கொணர உதவாவிட்டாலும்கூட அவரது அரசியல் வாழ்வு பூராகவும் அவரது சிறப்பியல்புகளாக வெளிப்பட்டன. மறுக்க முடியாத உண்மையாதெனில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல் வாழ்வில் பல ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டபோதும் அவர் தனது வாழ்வின் இறுதிவரை தனது நிலைப்பாட்டிலிருந்து திசை மாறவில்லை. அவரது அரசியல் எதிரிகள்கூட அவரது இந்த உண்மைக்கும் மாறா நிலைக்கும் உரிய கௌரவம் அளிக்காமல் இருக்க முடியாது"

முதலாவது, 1965/1966 இல் (அவர் யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மாத்திரமே) ஐக்கிய நாடுகள் சபைக்கு இலங்கைத் தூதுக்குழுவின் தலைவராகச் சென் போது ஆற்றியவுரை. அவரது சண்டாமாருதச் சொற்பொழிவைக் கேட்டு ஐ.நா. சபையே பெருமை பெற்றது.

அவர் பேசி விட்டு அமர்ந்ததும் அமெரிக்காவின் பிரதிநிதியான பிரான்ஸ் வில்லிஸ் என்ற பெண்மணி ஓடோடி வந்து அவரது கரங்களைப் பற்றி கைலாகு கொடுத்தார். "**அபிவிருத்தியில் பின்தங்கிய ஒரு நாட்டின் குரல் இதுவென்றால் நாமும் அபிவிருத்தி குன்றிய நாடாக இருக்கக்கூடாதா**" என்று பிரலாபித்தார் அந்த அம்மையார்.

டெய்லி மிரர் ஜீ.ஜீயினுடைய ஐ.நா. உரையைப் பற்றி ஆசிரியத் தலையங்கம் தீட்டி பாராட்டியது. தன்னிகரற்ற ஆங்கில எழுத்தாளரான ரெஜிமைக்கல் எழுதிய தலையங்கம் ஜீ.ஜீ.யின் ஐ.நா. உரை அவரது வரலாற்றில் ஒரு மைல்கல் எனலாம்.

**யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற சமயம், ஊடகவியலாளர் பாலகுமார் தனதுரையில் பின் வருமாறு குறிப்பிட்டார்,**

"பொன்னம்பலம் தனது சமநிலைப் பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கையை முன் வைத்தார். எனக்கு முதலில் அது விளங்கவில்லை. நான் பத்திரிகையில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கின்றேன். அதில் அதைப் பற்றிச் சொன்னேன். அதாவது சிங்களவர் 50 வீதம் நாடாளுமன்றத்தில் இருந்தால் ஏனைய சிறுபான்மை இனங்கள் அனைத்துக்குமாக 50 வீதம் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பதுதான்". அது நல்லதொரு அருமையான, சட்டரீதியான பொயின்ற். ஆனைமார்க் தீப்பெட்டி மாதிரி நல்லதொரு பொயின்ற. இல்லை என்று நான் சொல்லவில்லை.

அவர் அப்பொழுது மணித்தியாலக் கணக்காக தொடர்ந்து மரதன் வாதம் செய்தார். தமிழருக்காக வாதிட்டதற்கு நாங்கள் நன்றி செலுத்துகின்றோம்.

**அப்போது சோல்பரி பிரபு கூறுகையில்;** "நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. இங்கே அப்படியொன்றும் நடக்காது. அப்படியொரு நிர்வாக ரீதியான பாராபட்சம் உங்களுக்கு காட்டப்படமாட்டாது". அப்பொழுது பொன்னம்பலம் 'அப்படியில்லை. இந்த எண்ணிக்கையை வைத்து இவர்கள் எங்களை துலைக்கப் போகிறார்கள் என்று தெளிவாகச்' சொல்லியுள்ளார்.

**ஜீ.ஜீ.பொன்னம்பலம் 1939 இல் அரச சபையில் சமநிலைப் பிரதிநிதித்துவம் பற்றி தமது மரதன் உரையில் கூறியதாவது;**

"தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாடு என்ன? எமது நிலைப்பாடு இதுதான் என்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நாம் இந்நாட்டின் பூர்வீகக் குடிகளாக இங்கு வாழ்ந்து வந்திருக்கின்றோம். தமிழ்ச் சமூகத்தின் ஒரு கிளையினர் எமது சிங்களச் சகோதரர்களை விட நீண்டகாலம் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். இதுவே எமது தாயகம்.

அரசியல் ரீதியாகவும் வேறு வகையிலும்

**இன்று இவரது**
**37 ஆவது ஆண்டு**
**நினைவு தினம்**

நிரந்தர உரித்துக்களைக் கோருவதற்கு சிங்கள மக்களுக்குள்ள அதே உரிமை எமக்குண்டு. நாம் வேண்டப்படாத அந்நியர்களாக நடத்தப்படுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் மத்திய ஐரோப்பாவின் நாசி நாடுகளில் யூதர்களைப் போன்று "**கெட்டோக்கலில்**" பிரித்து வைக்கப்படுவதையும் நடத்தப்படுவதையும் சகித்துக் கொள்ள முடியாது அதனைச் சகித்துக் கொள்ளவும் மாட்டோம்"

சோல்பரி ஆணையாளர்களினால் சரி சமநிலையான பிரதிநிதித்துவக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் பின்னர் 1956, 1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் திட்டமிட்ட இனப்படுகொலைகளை தவிர்த்திருக்கலாம் என்பதுடன் தமிழர்களை 2 ஆந்தரப் பிரஜைகளாக்கி அவமானப்படுத்திய அருவருப்பாபன சிங்களம் மட்டும் சட்டத்தையும் பாராளுமன்றத் தில் நிறை வேற்றியிருக்க முடியாது போயிருக்கும்.

சமநிலைப் பிரதிநிதித்துவத்தை வழங்குவதன் மூலம் மட்டுமே ஜனநாயக நாடொன்றில் ஓர் இனத்துவேஷப் பெரும்பான்மை, சிறுபான்மைகளின் உரிமைகளை மிதித்து வைப்பதைத் தடுக்க முடியும். சமநிலைப் பிரநிதித்துவமென்ற இக்கோட்பாடு ஐக்கிய அமெரிக்காவில் செனட்டர்களைத் தெரிவு செய்வதில் பின்பற்றப்படுகின்றது.

**நயினாதீவில் அட்டூழியம், முப்படைத் தளபதிகளுடன் ஜீ.ஜீ.வருகை ;**

1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது நயினாதீவில் குடி கொண்டிருந்த மக்கள் சொல்லொணாத் தொல்லைகளால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சமயம் ஜீ.ஜீ. அச் சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்டதும் யாழ். நகர் தரைப்படைத் தளபதி சேரம் உட்பட கடற்படை, பொலிஸ் படை, அதிபர்களோடு அங்குசென்றார். அங்கே நயினாதீவுப் பாலத்தில் தாரினால் எழுதப்பட்ட தமிழ் ஸ்ரீயை அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர்களான அண்ணன் தம்பியைக் கொண்டு நாக்கினால் நக்கி அழிக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதையும் அசிங்கமான முறையில் அவர்களைக் கொண்டு செய்வித்த தண்டனைச் செயல்களையும் ஜீ.ஜீ. விபரமாக படைத் தலைவர்களுக்கு எடுத்துரைத்தார். நயினாதீவுக் கோவில் தேருக்கும் கோவில் கதவுக்கும் தீ வைத்த கொடூரக் காட்சிகளையும் காண்பித்தார். பார்வையிட்டவர்களை திகில் நிறைந்த வேதனையோடு ஜீ.ஜீ. கைலாசநாதக் குருக்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். முதல் நடவடிக்கையாக ஊர் மக்களை ஒன்றுகூடச் செய்தார். ஜீ.ஜீ.யின் வேண்டுதலின்படி கால்நடைகள் மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்பட்டன. தோட்டங்களுக்கும் வயல் நிலங்களுக்கும் போக வேண்டியவர்களைத் தவிர ஏனையோரை தவறாமல் ஒன்று கூடும்படி அழைத்தார். அத்துடன் மீனவர்களும் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஜீ.ஜீ.யின் வேண்டுகோளின்படி சொற்பநேரத்திற்குள் பெருவாரியான மக்கள் சமூகமாகி உண்மைகளை வெளிக் கொணர்ந்தனர். தலைமறைவாகியோரும் ஜீ.ஜீ.யின் உறுதிமொழியை ஏற்று அங்கு சமூகமளித்ததோடு படையினர்- பொதுமக்கள் இடையே சமரசத்தை ஏற்படுத்தி மக்கள் பயமின்றி வாழக்கூடிய சூழலை ஏற்படுத்தி விட்டு ஜீ.ஜீ. திரும்பிச் சென்றார்.

**அமிர்தலிங்கம் யாழ்.முற்றவெளியில் அமரர் ஜீ.ஜீ.யின் இறுதி யாத்திரை வைபவத்தில் கூறியதாவது;**

தமிழினத்தில் முதன்முதல் தட்டியெழுப்பிய தலைவன் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் என்றே பகிரங்கமாகக் கூறியிருந்தார். இவை யாவும் பத்திரிகைகளில் வெளியானது.

**தொகுப்பு:- க.மு.தர்மராசா**

# ஹலால் சான்றிதழ் பிரச்சினை அவதானிக்கப்படுகிறது-அரசாங்கம்

(கொழும்பு)

ஹலால் சான்றிதழ் வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை அரசாங்கம் அவதானத்துடன் கையாள்வதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இரு இனங்களுக்கு இடையில் பாரிய முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்தக்கூடிய அளவில் வளர்ந்துள்ள இந்த ஹலால் சான்றிதழ் வழங்கும் பிரச்சினையை அரசாங்கம் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கின்றது. இது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இன முரண்பாட்டுகள் காரணமாக கடந்த காலங்களில் மிகவும் பாரதூரமான விளைவுகளைச் சந்தித்த அனுபவம் இலங்கை மக்களுக்கு உண்டு.

இலங்கையில் சகல இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனினும் இந்த உரிமை மீறப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராயப்படவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இது மத பேதங்களைத் தூண்ட வழி வகுத்துள்ளது. இன மோதல்கள் வெடிக்கக்கூடிய சூழலைத் தோற்றுவித்துள்ளது.

இது உடனடியாகப் பேசித் தீர்க்கக்கூடிய பிரச்சினையல்ல. இன்றோ அல்லது நாளையோ அதற்கான முடிவை அறிவித்துவிட முடியாது. எனவே அரசாங்கம் மிகவும் பொறுப்புடன் செயற்படுகின்றது.

இப்பிரச்சினை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்களுக்கு அரச தரப்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உரிய பதிலை வழங்குவார்.

சகல சமயங்களுக்கும் சமவுரிமைகள் இருக்க வேண்டும். அதேநேரம் இலங்கையில் சட்டங்களையும் அவர்கள் மதித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த ஹலால் சான்றிதழ் வழங்குவதில் ஒரு பிரச்சினை இருக்கின்றது என்பது எனது கருத்தாகும்.

இந்த பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டு வர சகல இன மக்களும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

(அ-2)

# தொழில்நுட்ப அலுவலகர் பரீட்சை யாழில்

மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலகர் வாய்மூலப் பரீட்சை இன்று சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவிருந்தது. இப் பரீட்சையை யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தலைவர் செ.ரமணனின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தலைவர் செ.ரமணன் தெரிவித்துள்ளார்.

(எ-11)

# பாட ரீதியான கலந்துரையாடல்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் 12 கல்வி வலயங்களின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கிடையில் பாட ரீதியான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

கணக்கியல், பொருளியல், வர்த்தகம், வரலாறு, புவியியல், அளவையியல், அரசியல் விஞ்ஞானம், குடியுரிமைக்கல்வி ஆகிய பாடங்களில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் ஒருவர் வீதம் மேற்படி செயலமர்வில் கலந்து கொள்ள ஒழுங்கமைப்பு செய்யுமாறு அவர் கல்விப்பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆசிரியர்கள் கலந்துரையாடல்களுக்கு வருகை தரும் போது ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியுடன் தொடர்புடைய வேறு ஆவணங்களும் எடுத்து வர வேண்டுமென மேலும் அவர் அறிவித்துள்ளார்.

(அ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவுகாத்த கிளிகளாய் ஈழத்தமிழர்கள்......!

## மீளுமா உரிமைகள்?



மறுபடியும் மார்ச் மாதத்தை நோக்கி ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்புகள் பெருகத் தொடங்கிவிட்டன. தமிழர்கள் இப்படியாக வெளியிலிருந்து வரக்கூடிய மீட்சிகளுக்காக காத்திருப்பது என்பது இதுதான் முதற் தடவையல்ல. இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் தமிழர்கள் தாங்கள் இனரீதியாக ஒடுக்கப்படுவதாக நம்பத் தொடங்கியபோது தோன்றிய ஒரு காத்திருப்பு இது. தென்னிலங்கையில் காலத்துக்குக் காலம் நிகழ்ந்த இன வன்முறையில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இந்தியாவை நோக்கி காத்திருப்பதிலிருந்து இது தொடங்கியது. பின்னர் ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியோடு குறிப்பாக திருமதி இந்திராகாந்தியின் காலத்தில் இக் காத்திருப்பு ஒரு புதிய வளர்ச்சியை அடைந்தது. இந்தியா ஒரு படை நடவடிக்கை மூலம் பங்களாதேசைப் பிரித்ததுபோல இலங்கைத் தீவிலும் ஒரு படை நடவடிக்கையை மேற்கொள்ளும் என்ற காத்திருப்பு 1987 வரை மிக வலிமையாக காணப்பட்டது.

ஐ.பி.கே.எவ். உடனான மோதல் மற்றும் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டமை என்பவற்றின் விளைவாக இந்தியாவின் கதவுகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து மேற்கத்தேய கதவுகள் ஒப்பீட்டளவில் அகலத் திறக்கப்பட்டன. எழுச்சிபெற்று வந்த புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் அதற்கு முக்கிய காரணம். தொடக்கத்தில் புலம்பெயர் சமூகமானது ஈழப்போரின் காசு காய்க்கும் மரமாகத்தான் காணப்பட்டது. அதன்பின் மூன்றாம் கட்ட ஈழப்போரின் போது அதுவொரு பிரித்துப்பார்க்க முடியாத நிதிப் பின்தளமாக மாறியது. மூன்றாம் கட்ட ஈழப்போரின் முடிவில் மேற்கு நாடுகளின் அனுசரணையுடனான சமமான முயற்சிகளின் பின்னணியில் அது அபிப்பிராயங்களை உருவாக்க வல்லதும் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தவல்லதுமான ஓர் இரண்டாவது பின்தளம் என்று அழைக்கப்படக்கூடிய வளர்ச்சியைப் பெற்றது. இதனால் ஈழத்தமிழர்களின் காத்திருப்பு என்பது மேற்கையும் நோக்கித் திரும்பியது.

பின்னர் நான்காம் கட்ட ஈழப்போர் வெடித்த போது மேற்படி மேற்கை நோக்கிக் காத்திருத்தல் என்பது உச்ச வளர்ச்சியை அடைந்தது. இடையிடை தமிழ் நாட்டை நோக்கியும் காத்திருப்பு திரும்பியதுண்டு. தோல்விகளின் கடற்கரையை நோக்கி ஒரு பெரிய சவ ஊர்வலம் போல சனங்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து கொண்டிருந்த காலம் அது. எனவே, பற்றிக் கொள்ள எது கிடைத்தாலும் அதைப் பற்றிக் கொண்டு மீண்டுவிட வேண்டும் எனும் தவிப்பே மேலோங்கியிருந்தது. அத்தகைய ஒரு பின்னணியில் கருணாநிதி மனிதச் சங்கிலிப் போராட்டம் என்றபோதும் தேர்தலில் வெல்வதற்காக ஜெயலலிதா ஈழத் தமிழர்களை தத்தெடுப்பதுபோலப் பேசிய போதும் சாதாரண ஈழத்தமிழர்கள் தமது நம்பிக்கைகளை மீண்டுமொரு தடவை தமிழ் நாட்டுத் தலைவர்களின் மீது முதலீடு செய்தார்கள்.

அதைப் போலவே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போதும் ஒபாமாவிற்கான தமிழர் அமைப்பின் மூலம் அமெரிக்காவின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தலாம் என்றவொரு நம்பிக்கை வன்னிப் பெருநிலத்தில் சாதாரண தமிழ் மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது. ஒபாமாவின் பதவியேற்பு உரையின்போது அவர் ஈழத் தமிழர்களைப் பற்றிக் குறிப்பிடுவார் என்றொரு வதந்தியும் உலவியது. அரச ஊழியரான எனது நண்பர் ஒருவர் அப்போது என்னிடம் வந்து எரிச்சலடைந்தவராகக் கேட்டார், ஒபாமாவை ஏன் இப்படி முரட்டுத்தனமாக நம்ப வேண்டும்... ஒபாமா என்ன இவர்களுடைய வகுப்பறைச் சகபாடியா... என்று. ஒபாமா பதவிக்கு வந்தார்; எதுவும் நடக்கவில்லை. பெரும் எதிர்பார்ப்புகளை உருவாக்கிய வணங்கா மண் கப்பலும் வன்னிக் கரைகளுக்கு வந்து சேரவில்லை.

முடிவில் எல்லாக் காத்திருப்புகளும் வீண் என்றானபோது நந்திக்கடலை நோக்கி நடக்கத் தொடங்கிய இறுதி நாட்களில் படித்த மற்றும் அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல தமிழர்களின் மத்தியில் மேலுமொரு காத்திருப்பு மிஞ்சியிருந்தது. நிலம் சிறுத்துக்கொண்டே போனது. யூதர்களின் நவீன வரலாற்றை எக்ஸோடஸ் என்ற நாவலாக எழுதிய லியன் ஊரிஸ் தனது நாவலில் கூறியதுபோல அதிசயங்கள், அற்புதங்களின் காலம் எனப்படுவது எப்பொழுதோ முடிந்துவிட்டிருந்தது. அம்பலவன் பொக்கணை நெடுஞ்சாலை வழியாக கைகளை உயரத் தூக்கியபடி நடப்பதே இறுதித் தெரிவாக இருந்தது.

இப்படியாக சுமார் அரைநூற்றாண்டுக்கும் மேலாக ஏதோவொரு வெளிச் சக்திக்காக காத்திருந்த ஜனங்கள் நந்திக்கடற்கரையில் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு சுமார் 4 ஆண்டுகள்ஆன பின்னும்கூட மறுபடியும் வெளியிலிருந்து வரக்கூடிய மீட்சி ஒன்றுக்காக காத்திருப்பது என்பதை எப்படி விளக்கிக்கொள்வது?

முதலில் மேற்படி காத்திருத்தலின் புவிசார் சமூகப் பண்பாட்டு வேர்களைக் கண்டுபிடிப்போம். அதன்பின் இப்போதுள்ள மேற்கை நோக்கிய காத்திருத்தலின் அரசியல் அடிப்படைகளை ஆராய்வோம். முதலாவதாக மேற்படி காத்திருத்தலின் அரசியல் சமூக பண்பாட்டு அடிப்படை எதுவென்பது?

இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் தெற்கு மூலையில் தமிழகத்துக்கு கீழே இருக்கும் ஈழத்தமிழர்களின் புவிசார் அரசியல் அமைவிடம்தான் இதற்குரிய அடிப்படைக் காரணம். இவ்வமைவிடம் காரணமாக ஈழத்தமிழர்கள் எப்போதும் தங்களைத் தமிழகத்தின் பின்னணியில் வைத்துச் சிந்தித்து வந்திருக்கிறார்கள். பெரும்பான்மைச் சிங்களவர்கள் மத்தியில் தங்களைச் சிறுபான்மையினராக உணரும் போதெல்லாம் தமிழர்கள் சிங்கள சமூகத்தினரைவிடவும் பெரியதும் வலியதும் ஆகிய தமிழகத்தின் தொடர்ச்சியாக தங்களை அடையாளப்படுத்துவதன் மூலம் இச்சிறு தீவில் தங்களை நிலைநிறுத்த முயன்றுள்ளார்கள். இலங்கை- இந்திய உடன்படிக்கையின் விளைவாக ஏற்பட்ட புதிய எதிரமறையான அரசியற் சூழலில் மேற்படி ஈழ- தமிழக உறவில் குறிப்பாக அரசியற் தளத்தில் ஓர் இடைவெளி ஏற்பட்டிருந்தாலும்கூட வேர்நிலை உறவில் அதாவது இனத்துவ மற்றும் சமூக கலை பண்பாட்டுத் தளங்களில் பாரதூரமான விரிசல்கள் ஏதும் ஏற்படவில்லை.

1990 களிலிருந்து புலம்பெயர் தமிழ்ச் சமூகம் ஒரு நிதிப் பலமுடைய பின் தளமாக எழுச்சிபெற்ற போதும் அது ஓர் இரண்டாவது பின்தளமாகத்தான் காணப்படுகின்றது. உடனடியான முதல்நிலைப் பின்தளமாக தமிழகமே தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இத்தகைய ஒரு பின்னணியில் தமிழகத்துடன் தங்களை இணைத்து அடையாளப்படுத்துவதிலிருந்து தொடங்கியதே இந்தியாவுக்காகக் காத்திருத்தல் என்பது. பிந்திய தசாப்தங்களில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒரு பலமான இரண்டாவது பின் தளமாக மேலெழுந்தபின் மேற்குக்காகக் காத்திருப்பதுமாக மேற்படி காத்திருத்தலானது மைய இடப்பெயர்ச்சிக்கு உள்ளாகியது. இதுதான் ஈழத்தமிழர்களுடைய காத்திருப்பு அரசியலின் பின்னணி.

இந்தியாவை நோக்கி காத்திருப்பதிலிருந்து தொடங்கியது இப்பொழுது அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளை நோக்கிக் காத்திருப்பதாக மையமாற்றம் கண்டுள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் தமிழ்ச் சினிமாவில் உச்சக்கட்டத்தை நோக்கிக் காட்சிகள் உணர்ச்சிகரமாகக் கட்டியெடுப்பப்படுவதுபோல எதிர்பார்ப்புகள் கட்டியெழுப்பட்டு வருகின்றன.

ஆனால், இது தமிழச் சினிமாவைப் பார்ப்பது போன்றது அல்ல. தமிழர்கள் இந்த இடத்தில் நிதானமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் சிந்திக்க வேண்டும். இது முழுக்க முழுக்க மேற்கு நாடுகளின் முன்முயற்சிதான். இதில் புலம்பெயர் தமிழர்களுடைய பங்களிப்பென்பது ஒப்பீட்டளவிற் குறைவு. சாதாரண தமிழர்களில் பலர் நம்புகின்றார்கள். இவையெல்லாம் புலம்பெயர்ந்த தமிழர்களின் முன் முயற்சிகளின் திரட்டப்பட்ட விளைவென்று. ஆனால், அது ஒரு சிறிதளவு உண்மை மட்டுமே. இப்படியொரு தீர்மானத்தைக் கொண்டு வருவது என்பது மேற்கு நாடுகளின் முகவர்களாகத் தொழிற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் மற்றும் மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் எடுக்கப்பட்ட ஒரு முடிபுதான். இதில் தமிழர்கள் வெறும் கருவிகள் மட்டுமே. அதாவது மேற்கு நாடுகளின் உலகளாவிய நிகழ்ச்சி நிரலின் கருவிகளாக தமிழர்கள் கையாளப்படுகிறார்கள். 1980களில் எப்படி பிராந்தியப் பேரரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமிழர்கள் கருவிகளாகக் கையாளப்பட்டார்களோ அப்படித்தான் இதுவும். சீனாவை நோக்கிச் சரியும் இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கான நிர்ப்பந்தங்களை பிரயோகிப்பதே மேற்கு நாடுகளின் இறுதி இலக்காகும்.

தமிழர்களிற் பலர் நம்புவதைப்போல இலங்கை அரசாங்கத்தைத் தண்டிப்பது மேற்கு நாடுகளின் முதல்நிலை நோக்கம் அல்ல. கடந்த ஆண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனால் பெரிய திருப்பங்கள் எதுவும் ஏற்படவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் 35 வீதத்தை மட்டுமே நிறைவேற்றியிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. இந்நிலையில் இவ்வாண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும். அது கடந்த ஆண்டைவிட சற்றுக் கடுமையாக இருக்கக் கூடும். நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான கட்டமைப்புகளை உருவாக்குவது, அவற்றுக்கான கால எல்லைகளை உடைய செயன்முறை வரைபடத்தை உருவாக்குவது போன்ற திசைகளிலேயே அதிகம் சிந்திக்கப்படக்கூடும். ஆனால், அரசாங்கம் ஏற்கனவே இந்தியாவைச் சமாளிக்கும் முயற்சிகளில் இறங்கியிருப்பது தெரிகிறது. இதன்மூலம் வரப்போகும் தீர்மானத்தின் கடுமையைத் தணிக்க அல்லது மேலும் ஒரு கால அவகாசத்தைப் பெற அவர்கள் முயற்சிக்கக் கூடும். மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு தெரிவுகள் குறைவாகவே காணப்படுகின்றன. அரசாங்கத்தை வளைப்பதே அவர்களுடைய நோக்கம். முறிப்பது அல்ல.

எனினும் வரப்போகும் தீர்மானம் உடனடிக்குத் தமிழர்களுக்குச் சாதமாகவே அமையும். அதன்மூலம் தமிழர்களின் கோரிக்கைகளுக்குச் சர்வதேச அந்தஸ்தும் அங்கீகாரமும் அதிகரிக்கக்கூடும்.

இந்நிலையில் சக்தி மிக்க மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கும் தமது நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் ஒரு பொதுப் பரப்பைக் கண்டுபிடித்து அதைப் பலப்படுத்துவதென்றால் தமிழர்கள் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விவகாரம் உண்டு. இப்பொழுது கொழும்புக்கு எதிராக காய்களை நகர்த்துவது போலத்தோன்றும் பெரும்பாலான மேற்குநாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை இன்றுவரையிலும் அகற்றப்படவில்லை. அதேசமயம் நாடு கடந்த தமிழீழ அரசிற்கு சட்ட ரீதியான சவால்கள் எதுவும் இதுவரை தோன்றவுமில்லை. எனவே, ஈழத்தமிழர்களுக்கான மேற்கு நாடுகளின் செய்தி மிகத் தெளிவானது. அதாவது ஆயுதப் போராட்டம் அல்லது ஆயுதமேந்திய நடவடிக்கை எதற்கும் அவர்கள் ஆதரவு தரப் போவதில்லை. பதிலாக ஜனநாயக விழுமியங்களை அடித்தளமாகக் கொண்ட செயற்பாடுகளுக்குத்தான் ஆதரவுண்டு. இப்போதுள்ள நிலைமைகளின் படி விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான ஈழத்தமிழ் அரசியல் எனப்படுவது ஜனநாயக அடித்தளத்தின் மீதுகட்டியெழுப்பப்படும் ஒன்றாக அமைந்தால் மட்டும்தான் தமிழர்களின் நிகழ்ச்சி நிரலுக்கும் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலுக்கும் இடையில் ஒரு நலன்சார் பொதுப் பரப்பை பலப்படுத்த முடியும். இதில் ஈழத்தமிழர்கள் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் அல்லது இதற்கு எதிர்த்திசையில் சிந்திக்கும் ஒவ்வொரு கணமும் அவர்களை அரசியல் அநாதைகளாக்கிவிடும். ஏனெனில், சீனாவை நோக்கிச் சாயும் கொழும்பை வளைத்தெடுப்பதே மேற்குநாடுகளினதும் இந்தியாவினதும் உடனடி இலக்காகும். இது விடயத்தில் சீனாவைக் கைவிடுவது என்ற ஒரு முடிவை கொழும்பு எடுக்குமாயிருந்தால் முழு உலகமுமே ஈழத் தமிழர்களைக் கைவிட்டுவிடும். ஏற்கனவே நந்திக்கடற்கரையில் கைவிட்டதைப்போல.

குளோபல் தமிழ் நியூஸ் நெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை நிர்ணய அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் 4 பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைகள் மாற்றப்படுதல் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரிந்துரை அடங்கிய அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் நடுப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட எல்லைக் குழப்பத்திற்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் வேலைகளில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈடுபட்டிருந்தனர்.

அதன் இறுதிக்கட்ட தீர்மானம் எடுக்கப்பட்டு நேற்று முன்தினம் அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அதன் பிரதிகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், பொது நிர்வாக அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

குறிப்பிட்ட பிரதேச செயலகங்களின் எல்லைகள் ஏற்கனவே இருந்ததன்படியே இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்துள்ளது. இதுவே எங்களது முடிவாகும். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு மட்டுமல்ல மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களின் முடிவுமாகும்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன ரீதியான பிரதேச செயலகங்களை உருவாக்கக்கூடாது என்பது எங்களது முடிவாக இருக்கின்றது. எமது மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் 4 முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுகளும் 10 தமிழ் பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளன.

நான்கு தவிர 10 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 26 ஆயிரத்து 300 ஏக்கர் விவசாய நிலங்கள் முஸ்லிம் மக்களுக்கு உள்ளதுடன் 832 ஏக்கர் நிலங்களின் முஸ்லிம் மக்கள் குடியிருக்கிறார்கள். ஆகவே எங்களுக்கு எந்தவிதமான பாகுபாடும் இல்லை. அவர்கள் எங்கும் வாழலாம் என்று தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படாத நிலையில் ஜனாதிபதிக்கு ஒவ்வொரு தரப்பும் பரிந்துரைகளை முன்வைக்கும்படியும் ஜனாதிபதி முடிவுகளை அறிவிப்பார் என்றும் பொது நிர்வாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்திருந்தார்.

அதற்கமைவாக மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடன் மட்டக்களப்பில் நடைபெற்ற ஆராய்வுகளையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பரிந்துரைகளை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேநேரம் ஏனைய தமிழ் கட்சிகள் தனித்தனியாக தமது பரிந்துரைகளையும் முன்வைக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் கைதாகினர்

(கொழும்பு)

பாரியளவிலான ஹெரோயின் போதைப்பொருள்வர்த்தகத்தில்ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விளையாட்டு பொம்மைகளின் ஊடாக மிகவும் சூட்சுமமான முறையில் போதைப் பொருட்களை வெளிநாட்டுக்கு கடத்தியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி ரத்தொட்ட பொலிஸார் இந்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்களிமிருந்துபோதைப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. ரத்தோட்டையில்வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர் நிறுவனமொன்றை நடத்திச் சென்றவர்களே இவ்வாறு போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் நபர்களிடம் அவர்களுக்குத் தெரியாமலேயே இவ்வாறு போதைப் பொருள் அடங்கிய டெடிபியர் விளையாட்டுப் பொம்மைகள் வழங்கப்படுகின்றன.

குறித்த நபர்கள் இந்தப் பொம்மைகளை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்று சிலரிடம் ஒப்படைப்பதாகவும் அவர்கள் அந்தந்த நாடுகளில் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து இந்த போதைப் பொருள் வர்த்தகத்தை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# மனித உரிமை பேரவைக்கான குழு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகள் பேரவைக்காக அனுப்பப்படவுள்ள இராஜதந்திர குழு விரைவில் தீர்மானிக்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போதைய நிலைவரத்தின் முன்னேற்றங்களை அவதானித்த பின்னரே இந்தக் குழு தீர்மானிக்கப்படும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாத இராஜதந்திர குழு ஒன்றையே அரசாங்கம் ஜெனீவாவுக்கு அனுப்பவுள்ளதாக தகவல் வெளியானமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், அவ்வாறான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

எனினும் இந்த விடயத்தை கையாளுமாறு ஜெனீவாவில் உள்ள தூதுவர் ரவீந்திர ஆரியசிங்கவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமைச்சர் வீரவன்சவின் கருத்து குறித்து விசாரணை

(கொழும்பு)

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவின் கருத்து தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாக அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதரகம் இலங்கையின் உள்விவகாரங்களில் குழப்பங்களை விளைவிக்க முயற்சிக்கின்றது என விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் கருத்து தொடர்பில் விசேட விசாரணைகள் நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டணி கட்சியொன்றின் தலைவர் என்ற ரீதியில் இது தொடர்பான விசாரணை நடத்தப்படும். எனினும் அரசாங்கம் இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## விண்ணப்பம்கோரல்

இலங்கைத்திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் சுற்றுலாத்துறையில் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு 18 வயதைப்பூர்த்தி செய்த அனைவரும் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)




★ 1822 - ஹெயிட்டி புதிதாக அமைக்கப்பட்ட டொமினிக்கன் குடியரசை முற்றுகையிட்டது.

★ 1885 - முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்தனர்.

★ 1895 - வில்லியம் மோர்கன் கரப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்தார்.

★ 1897 - பெனின் மீது பிரித்தானியர் தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1900 - இலங்கையிலும், இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

★ 1900 - டேவிஸ் கோப்பை டெனிஸ் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1904 - போர்ட் ஆர்தர் சமர் ஆரம்பித்தது.

★ 1942 - ஐக்கிய அமெரிக்காவில் பகலொளி சேமிப்பு நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1962 - பொதுநலவாய அமைப்பினுள் ஜமெய்க்கா விடுதலை பெற்றது.

★ 1965 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்க தாக்குதல் படைப்பிரிவு முதற் தடவையாக தென் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டது.

★ 1969 - போயிங் 747 விமானத்தின் முதற் சோதனைப் பறப்பு மேற்கொள்ளப்பட்டது.

★ 1971 - கலிபோர்னியாவில் 6.4 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 1971 - அப்பல்லோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பியது.

★ 1975 - சோயூஸ் 17 விண்கலம் பூமி திரும்பியது.

★ 1986 - ஹேலியின் வால்மீன் சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கி. மீ தூரத்தில் வந்தது.

★ 1991 - லித்துவேனியாவில் விடுதலைக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தார்கள்.

★ 1996 - ஐரிஷ் குடியரசு இராணுவம் தனது 18 மாத யுத்த நிறுத்த உடன்பாட்டினை முறித்துக் கொண்ட சில மணி நேரத்தில் லண்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1773 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9 ஆவது ஜனாதிபதி (இ.1841)

★ 1910 - ஜாக் மொனோட், நோபல் பரிசு பெற்றவர் (இ.1976)

★ 1940 - ஜே.எம்.கோட்ஸி, நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க எழுத்தாளர்

★ 1943 - ஜோசப் ஸ்டிக்லிட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர்.

★ 1970 - கிளென் மெக்ரா, அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்

★ 1979 - சாங் சீயீ, சீனத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

★ 1881 - பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய நாவலாசிரியர் (பி.1821)

★ 1977 - ஜி.ஜி.பொன்னம்பலம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் (பி.1901)

★ 1979 - டெனிஸ் காபோர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1900)

★ 1984 - யூரி அந்திரோபோவ், சோவியத் ஜனாதிபதி. (பி.1914)

★ 1994 - ஹவார்ட் டெமின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1934)


★ 2001 - ஹேர்பேர்ட் சைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர் (பி.1916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் பயன்தரும் மரங்களும் வேளாண் காடுகளும்

வூருங்கள் எம்மினிய உறவுகளே!

வேளாண் காடுகளைப் பற்றி நிறையவே பலரும் பேசிக் கொள்வதனை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. அதிலும் பல பயன்களைத் தரும் இம் மரங்களை தெரிவு செய்து நடுகை செய்வதையும் ஊக்குவிக்க வேண்டும். சென்ற திங்கட்கிழமை யூரோவில் கேட்போர் கூடத்தில் மாமரங்களின் உற்பத்தியை மற்றும் சந்தைப்படுத்தலை அதிகரிப்பது பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பல புலமையாளர்கள் கூடியிருந்த அவையில் எங்களூர் மா இனங்களைப் பற்றியும் அவை பழங்களை முல்லைத்தீவில் பெற்றதாக தெரிவித்தார். மேலும் எங்களூர் கறுத்த கொழும்பான் மாம்பழங்களுக்கு என்றுமே மவுசு இருப்பதையும் மேலும் பலவகை மாமரங்களை பாதுகாக்கவும் பேணிப் பராமரிக்கவும் எளிய வகை தொழில்நுட்பங்களை நாங்கள் நடுகை செய்யும் ஒவ்வொரு மரத்திலும் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் பரவலாக முன்வைக்கப்பட்டது. இவ்வாறாக மாமரங்களின் உற்பத்தியை அதாவது விளைச்சலை அதிகரிக்க அவை சிறப்பாக பராமரிக்கப்பட வேண்டும். இங்கே பராமரிப்பு என்பது மாம்பூவில் நிகழும் அயன் மகரந்த சேர்க்கை மிகவும் முக்கியமானது ஆகும். பூச்சிகளால் ஏற்படும் அயன் மகரந்த சேர்க்கையினால் மாமரங்களின் தனித்துவ தன்மை இழக்கப்படும் சாத்தியக்கூறும் உண்டு. மேலும் குறிப்பாக கறுத்த கொழும்பான் எனும் சிறந்த இனம் எமது பகுதிக்குரிய அடையாளமாகவும் இன்னும் இருக்கின்றதாக நாம் எண்ணிக் கொண்டிருந்தாலும் நாட்டின் வேறுபகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்து கறுத்த கொழும்பான் மாம்பழம் உற்பத்தியாகி தென்பகுதி சந்தைகளில் கிராக்கியுடன் விலையாவதை



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 24-XIV

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

அருகி வருவதைப் பற்றியும் கூறப்பட்டது. இதில் கலந்து கொண்ட முன்னை நாள் முதன்மை செயலாளர் ரங்கராஜன் மாமரமும் அதனது இயல்பு களும் பற்றி விரிவாகவே விளக்கி அதன் பின்னர் இக் கலந்துரையாடலுக்கு வருகை தந்திருந்த பலரும் வலுவான பல கருத்துக்களை முன் வைத்தனர். நூறு கூட்டத் தொடரை களங்கண்ட முகாமையாளர்கள் மன்றத்தில் இக் கருத்துக்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் முன் வைக்கப்பட்டு பல விடயங்கள் அலசி ஆராயப்பட்டன.

யாழ்ப்பாணத்து மாமரங்களின் பல வகைகளின் இனங்கள் அடையாளமின்றி அழிவடைந்து வருவதை பலரும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதில் கலந்து கருத்துக்களை பகிர்ந்த எந்திரி இராமதாசன் சிறந்த மாம் அனைவருக்கும் பொருந்தும்.

மாமரங்களின் உறுதிப்பாட்டையும் அவற்றினது தனித்துவத்தையும் பேணிப் பாதுகாப்பது முக்கியம். அதிலும் விலங்குகளால் மகரந்த சேர்க்கைக்கு ஊன்றுகோல் கொடுக்கப்பட்டாலும் இவ்வாறான மரங்களை அழிய விடாது தவிர்த்து அவற்றின் பயன்பாட்டை பெறுவது என்றுமே நல்லது. மாமரங்களை வீதியோரம் வளர்க்கும் போது அவை சிறப்பாகவும் பறவைகள், மிருகங்களை கவரும் தன்மையுடையதாகவுமிருக்கும்.

எங்களூரில் மாம்பழங்கள் மிகவும் சுவையுடையவையாகும். இவற்றிலிருந்து தெரிவு செய்யப்படும் மாம்விதை தனித்துவமுடையதாக இருப்பினும் அவற்றிலிருந்து உருவாகும் மரங்கள் அவற்றினது தாய் மரங்களைப் போல தனித்துவமாக இருப்பதில்லை. இதற்கும் அவதானிக்கலாம். மாறாக எமது பகுதியில் கறுத்த கொழும்பான் மாம்பழம் உருமாறி விளைச்சலும் குறைவடைந்து வளங்குன்றிப் போயிருப்பதையும் கண்டு கொள்கிறோம். ஏன் இப்படி ஆனது என பலரும் அங்கலாய்ப்பதுவும் அதற்கான பல காரணங்களை தேடி கலந்துரையாடுவதையும் காணும் அதே நேரத்தில் இவ்வாறான எமது பழமரத்தினை கவனியாது அழிய விட்டு விட்டோமோ என்ற கலக்கமும் எம்மவரிடையே முளைவிட்டு எழுந்திருக்கின்றது.

இது ஒரு முக்கியமான காலகட்டமாகும். போருக்கு பின்னராக மாமரங்களை எங்களூர் மாம்பழங்களை பேணிப் பாதுகாக்க முனைந்திருப்பது ஒரு நல்ல சமிக்ஞையாகவே தென்படுகிறது. மாமரங்களில் மாம் பழ செய்கையில் உள்ள பிரச்சினைகள், நாளைய மாம்பழ உற்பத்தி அதில் நாம் எதிர்நோக்கவிருக்கும் பிரச்சினைகள், அவற்றிற்கான சந்தை வாய்ப்பு, மதிப்பேற்றம் செய்ய உள்ள அனுகூலங்கள், இதன்மூலம் கிடைக்கும் வருமானம் இவற்றுடன் மாம்பழ உற்பத்தியை பாதிக்கும் காரணிகள், அறுவடைக்கு பிந்திய பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் என அனைத்தையும் அலசி ஆராய இருக்கிறோம். குறிப்பாக குருவிச்சையின் வளர்ச்சி மாமரங்களை முழுமையாகவே பாதித்திருப்பதை காணலாம். இவற்றுக்கு என்ன செய்யலாம்? தொடர்ந்து இதில் கலந்துரையாட உங்கள் கருத்துக்களை தெரிவிக்க வாரீர்.

# யாழ்.பிராந்திய மனித உ. ஆணைக்குழுவின் தலையீட்டால் சம்பள நிலுவை கிடைத்தது

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் 2006 ஆம் ஆண்டு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் கடமையாற்றியுள்ளார்.

தேவையின் நிமிர்த்தம் தனது மனைவியின் ஊரான கண்டாவளை பிரதேசத்திற்கு அவர் செல்ல வேண்டியதாயிற்று. இதனால் அங்கு சென்றார். அங்கு சென்ற சமயம் போர்ச் சூழல் ஆகையினால் ஏ-9 பாதை பூட்டப்பட்டதனால் அவர் கண்டாவளையிலேயே தங்க வேண்டிதாயிற்று.

இதனால் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் தனது கடமையினை தொடரமுடியாதுள்ளதாகவும் தற்காலிகமாக தான் வசிக்கும் கண்டாவளையில் உள்ள பிரதேச செயலகத்தில் தனது பணியினை தொடர சாவகச்சேரி பிரதேச செயலரின் அனுமதியுடன் அங்கு கடமையாற்றினார். எனினும் தற்காலிக பணிபுரிந்த காலமான 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையிலான வேதனம் எவையும் இவருக்கு வழங்கப்படவில்லை.

தன்னுடைய சம்பளம் வழங்கப்படாமை தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலருக்கும், கிளி.மாவட்ட அரச அதிபருக்கும், யாழ். சமுர்த்தி உதவி ஆணையாளருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் நிர்வாக ரீதியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படாததனை அடுத்து பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறையிட்டார்.

அதனைத் தொடர்ந்து மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கனகராஜ்ஜினால்பிரதிவாதிகளிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. குறித்த அறிக்கையின் யாழ். மாவட்ட செயலகத்திலிருந்தும் சமுர்த்தி அதிகார சபைக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் உரிய பதில் கிடைக்கவில்லை.

கொழும்பிலுள்ள சமுர்த்தி தலைமையகத்தினை மனிதஉரிமை ஆணைக்குழு தொடர்பு கொண்டு கேட்ட போது அலுவலக வரவுப்புத்தகத்தின் பிரதிகள் இணைக்கப்படவில்லை என காரணம் கூறப்பட்டது. இது தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலரிடம் கேட்ட போது யுத்தத்தினால் வரவுப்புத்தகத்தின் பிரதிகள் அழிவடைந்துவிட்டன என அறிய வந்தது.

இதனையடுத்து விசாரணையின் பிரதிவாதியாக மேலதிகமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் இணைத்துக் கொள்ளப்பட்டு கண்டாவளை, சாவ்கச்சேரி, கிளிநொச்சி பிரதேச செயலாளர்கள் சமுர்த்தி ஆணையாளர், உதவி சமுர்த்தி ஆணையாளர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உள்ளக கணக்காய்வாளர்களினை களத்திற்கு அனுப்பி உண்மைத்தன்மையினை பரிசீலித்து ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. இதன் தொடர் நடவடிக்கையாக குறித்த சமுர்த்தி உத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டும் என உத்தரவிட்டதன் பிரகாரம் இவருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சம்பள நிலுவைகளும் வழங்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் தெரிவித்தார். (அ-4)

## படையினரால் தாக்கப்பட்டவர் ம.உ.ஆணைக்குழுவில் முறையீடு

படையினரால் தாக்குதலுக்கு உள்ளான குடும்பஸ்தர் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குருநகர் ஐந்து மாடிப்பகுதியினைச் சேர்ந்த எட்வேட் நியூட்டன் (வயது 40) என்ற குடும்பஸ்தர் இராணுவத்தினரால் கடந்த புதன்கிழமையன்று தாக்கப்பட்டிருந்தார். இவர் மிகக்கடுமையாக தாக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றிருந்ததோடு யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் அவர் முறையிட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனராஜ்ஜிடம் கேட்ட போது,

இராணுவத்தினர் தன்னைத் தாக்கியதாக அவர் முறைப்பாடு செய்துள்ளார். எனினும் நாம் விசாரணைகளினை ஆரம்பிப்பதற்கு அவர் நேற்று வரை நேரில் சமுகமளிக்கவில்லை என தெரிவித்தார். (அ-4)

## மின்சாரம் தடைப்படும்

மின்சார திருத்த வேலைகள் காரணமாக முல்லை.மாவட்டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை முள்ளியவளை தேக்கங்காட்டுப் பகுதியில் மின்சாரம் தடை செய்யப்படும்.

இதனால் முள்ளியவளை, வற்றாப்பளை, அளம்பில், சிலாவத்தை ஆகிய பகுதிகள் உட்பட முல்லைத்தீவு பட்டினப் பிரதேசப் பகுதிகள் வரை மின்சாரம் தடைப்பட்டிருக்குமென முல்லை. மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார். (அ-2-15)

## உள்ளூர் இழுவைப் படகுகளையும் விரைவில் கட்டுப்படுத்த வேண்டும்

### மீனவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் 210 இழுவைப் படகுகள் தற்பொழுது தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் உள்ளூரில் சிறிய கடற்றொழில் கலங்களைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடல் தொழிலாளர்கள் பாதிப்படைவதாகவும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளை கட்டுப்படுத்துவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமோ அதேபோன்று உள்ளூரில் இழுவைப்படகுகளைக் கொண்டு தொழில் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களையும் கட்டுப்படுத்த வேண்டுமென பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் குருநகர் பகுதியில் 145 இற்கும் மேற்பட்ட இழுவைப்படகுகள் (ரோலர்) தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகவும் வல்வெட்டித்துறையில் 20 இழுவைப்படகுகளும் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட பேசாலையில் 45 இழுவைப்படகுகளும் பள்ளிக்குடாவில் 10 படகுகளும் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடல் வளத்தை முற்றாக அழிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் இழுவைப் படகு தொழில் நடவடிக்கையினை முற்றாக கட்டுப்படுத்த துறைசார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறுகல்நிலை ஏற்படாதிருக்க நாட்டை கண்காணியுங்கள்

## பொலிஸாருக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**எவ்வகையான இனவாத, மதவாத முறுகல் நிலைமையும் நாட்டில் எப்பகுதியிலும் இடம்பெறாதிருக்க தீவிரமாக கண்காணிக்குமாறு சகல அரசியல் தலைவர்களுக்கும் பொலிஸாருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார்.**

இன, மத ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி சகல சந்தர்ப்பங்களிலும் மதத் தலைவர்கள், அரசியல் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களது ஆலோசனைகளுடன் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார் என சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றும் போது முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையே நாட்டில் ஆங்காங்கே கலவரங்கள் தலைதூக்க முற்பட்டதாகவும் இது தொடர்பில் அரசு கவனம் செலுத்தவில்லை என்றும் குற்றம் சுமத்தியிருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருடங்களாக துன்பத்தை அனுபவித்த பின்னர் வென்றெடுத்த சமாதானத்தை பாதுகாத்துக் கொள்வதே எமது அரசின் முக்கிய நோக்கமாகும். இனவாதத்தை, மதவாத தீயைத் தூண்டும் எவ்வகையான செயற்பாடுகளுக்கும் எமது அரசிடமிருந்து ஆதரவு கிடைக்கப் போவதில்லை.

விசேடமாக இனவாத, மதவாதத்தினை பரவச் செய்வதற்காகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசை அபகீர்த்திக்கு உள்ளாக்குவதற்கும் அரசை கவிழ்ப்பதற்கும் சில சூழ்ச்சிக்காரர்களினால் அரசுக்கு பக்க பலமாக செயற்பட்டு வரும் முஸ்லிம் மக்களை அரசிடமிருந்து பிரிப்பதற்கு சில திட்டமிட்ட சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்த சூழ்ச்சிகளின் முக்கிய விடயமாக கட்டுக் கதைகள், வதந்திகள் பரப்பிவிடப்படுகின்றன. தற்போதைய நிலைமை உக்கிரம் அடைவதற்கு வதந்திகளே காரணம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வதந்திகளை பரப்பி விடுவதும் ஐ.தே.கவின் புதிய பிரசார உத்தி என்று ஐ.தே.க. எம்.பி.சுகத் சந்திரசேகரவும் குறிப்பிட்டிருந்தார்.

இனவாத, மதவாத தீயை பரப்பி அரசை ஸ்திரமற்றதாக ஆக்குவதற்கு சில குழுக்கள் வதந்திகளை பரப்புகின்றன என்பதும் எதிர்க்கட்சித் தலைவரின் உரையிலிருந்து தெளிவாகிறது.

எனவே, வதந்திகளை பரப்புவதால் ஏற்படும் பயங்கர விளைவுகளை கருத்தில் கொண்டு வதந்திகளை பரப்புவதை விடுத்து நேர்மையான அரசியலை நடத்த ஐ.தே.க. முன்வர வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் 10 முஸ்லிம் வணக்கஸ்தலங்கள் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார். இதனை முழுமையாக மறுக்கின்றோம்.

நாட்டில் சில இடங்களில் ஏற்பட்ட சில எதிர்ப்பு நடவடிக்கைகளை முற்றுமுழுதாக பெரிதுபடுத்தி முஸ்லிம் வணக்கஸ்தலங்கள் தாக்கப்பட்டதாக கூறுவது முற்றிலும் தவறானது. எந்த முஸ்லிம் வணக்கஸ்தலத்துக்கு தாக்குதல் நடத்தப்பட்டது என்பது பற்றி அவர் இந்த சபைக்கு தெரிவிக்க வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பாக விரிவாக பேச்சு நடத்துவதற்கு, ஆராய்வதற்கு, அதனூடாக பரிந்துரைகள் செய்வதற்கு அரசின் நியமிக்கவிருக்கும் தெரிவுக் குழுவை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு தெரிவுக்குழுவுக்கு ஆதரவு வழங்குவதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்றும் அமைச்சர் நிமால் தெரிவித்தார். (அ-2)

## மரதன் ஓட்டம்

(மானிப்பாய்)

கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியின் ஓர் அங்கமான மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. (அ-3-23)

## கரப்பந்தாட்ட போட்டி

(மானிப்பாய்)

பிரதேச செயலகங்களுக்கான விளையாட்டுப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கரப்பந்தாட்ட அணியினருக்கான போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (அ-3-23)

## யாழ்.இந்துவின் அபார ஆட்டத்தில் வீழ்ந்தது பொலநறுவை ம.வித்தி

13 வயது பிரிவுக்குரிய கிரிக்கெட் இரண்டாவது சுற்றுப்போட்டி பொலநறுவையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் யாழ். இந்துக்கல்லூரி அணி பொலநறுவை கதுள்ள மகா வித்தியாலய அணியை எதிர்த்து விளையாடியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பொலநறுவை கதுள்ள மகாவித்தியாலய அணி முதலில் களத்தடுப்பை செய்யதீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 337 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பில்:

கோபிராம்-62,சர்மிலன்-55, யனுசன்-45 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் பொலநறுவை கதுள்ள மகா வித்தியாலய அணிசார்பில்:

கேரத்-4, செனவிரட்ன-2 இலக்குகளை பெற்றனர்.

பின் 338 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பொலநறுவை கதுள்ள மகா வித்தியாலய அணி 18.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் பொலநறுவை கதுள்ள மகா வித்தியாலய அணி சார்பில்:

லக்மல்-11, பிரபகாஸ்வர-10 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில்:

சங்கீதன்-3, யனுசன்-1, கஜானன்-1 இலக்குகளை பெற்றனர். இதனால் யாழ். இந்துக் கல்லூரி அணி 258 எனும் ஓட்ட வித்தியாசத்தில் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-23)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக பொதுச் சுகாதார பரிசோதகர் பொ.சோழன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-5)

✷ ✷ ✷ ✷ ✷

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் அ.கைலாசபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர் சங்க கனடா கிளை தலைவர் கே.சந்திரசேகரமுதலி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.சிவகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-29)

✷ ✷ ✷ ✷ ✷

யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் அ.இரங்கநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்வி பணிப்பாளர் சண்முககுலகுமாரன், சிறப்பு விருந்தினராக ஜே/221 இளவாலை வடக்கு கிராம உத்தியோகத்தர் செல்வி மரின் பெனிற்றா பத்திநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

## கனேடிய உயர்மட்டக் குழுவினருடன் வடக்கு மாகாண ஆளுநர் சந்திப்பு

கனேடிய உயர் மட்ட குழுவினரிற்கும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறிக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி அன்று இடம் பெற்றது. இதில் கனேடிய சர்வதேச மேம்பாட்டு முகாமை தலைமையகம் கியூபெக் இன் இலங்கை, நேபாளம் மற்றும் இந்தியா ஆகிய ஆசிய நாடுகளுக்கான திட்ட சிரேஷ்ட அபிவிருத்தி அதிகாரி செல்வி நிக்கோல் றோபிலாட் தலைமையில் கொழும்பு அமெரிக்க தூதரகத்தின் செல்வி அபிராமி ஆகியோர் அடங்கிய குழுவினரே வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது யாழ்ப்பாண அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அவர்கள் வடமாகாணத்தில் நடைபெற்று வரும் விவசாய மற்றும் கால்நடை வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும் கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியினை உணவு மற்றும் விவசாய அமைப்பு மூலம் (FAO) வழங்குவது பற்றியும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் மாகாணத்தின் விவசாயம் மற்றும் கால்நடைத்துறையின் எதிர்கால தேவைகளை கேட்டறிந்ததோடு விவசாய



மற்றும் கால்நடை பயிற்சி நிறுவனங்களை வலுப்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்துவது பற்றியும் கலந்துரையாடினர். 15 மில்லியன் டொலர் பெறுமதிமிக்க செயற்றிட்டத்திற்கான வரைபு அறிக்கை ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த இவ்வரைபு அறிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடியதோடு அவர்கள் 7 பெப்ரவரி 2013 இல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி விவசாய பயிற்சி மையங்களையும் வவுனியா கால்நடை பயிற்சி மையத்தையும் பார்வையிட்டுள்ளனர். இதேவேளை றேட்ஸ் இலங்கையில் விவசாய பயிற்சி மற்றும் விரிவாக்கல் முறைமை மீள் நிர்மாணம் என புத்தாக்க பெயரிடப்பட்ட திட்டத்தினூடாக முழுமையான வசதிகளைக் கொண்ட சேவைக்கால பயிற்சி நிலையம் ஒன்றினை வட்டக்கச்சியில் அமைப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இச்சந்திப்பின் போது வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம்.ஹால்டீன், விவசாய திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார், மாகாண கால்நடை அபிவிருத்தி பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசிகரன், விவசாய அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ரி.சர்வானந்தா ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தனர். தொடர்ந்து கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் வருகைக்கு ஆளுநர் நன்றி தெரிவித்ததுடன் வடமாகாணத்தில் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு மேலும் உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். (அ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸி.எதிர்க்கட்சியின் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை

## சிறிதரன் எம்.பி வருத்தம்



**கடந்த மாதம் இலங்கை வந்து திரும்பிய அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியின் உபதலைவரான யூலி பிசப் தலைமையிலான குழு இலங்கை தொடர்பிலும் தமிழ்மக்கள் தொடர்பிலும் அவுஸ்திரேலியாவில் தெரிவித்த கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

மெல்பேர்னிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ்க்குரல் வானொலிக்கு கடந்த 6 ஆம் திகதி வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து திரும்பிய பின் ஜூலி பிசப், ஸ்கொட் மொறிசன் ஆகியோர் அவுஸ்திரேலிய ஊடகங்களுக்கு தமது இலங்கை பயணம் குறித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அதில் தமிழ் மக்கள் இலங்கையில் சுபீட்சமாக வாழ்கிறார்கள். அவர்கள் அரச அடக்குமுறையை எதிர்கொள்ளவில்லை. அமைதியாகவும் நிம்மதியாகவும் அங்கே வாழ்க்கை நடத்துகிறார்கள். அவுஸ்திரேலியாவுக்கு அகதியென்ற போர்வையில் வருபவர்கள் அனைவரும் சுகபோகமான ஆடம்பர வாழ்வுக்காகவே வருகிறார்களேயன்றி அவர்கள் உண்மையான அகதிகளல்லர் போன்ற கருத்துக்களை அவர்கள் முன்வைத்திருந்தனர்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை தாம் சந்தித்துப் பேசியதாகவும் தமிழ் மக்கள் அங்கே அரச அடக்குமுறையை எதிர்கொள்கிறார்கள் என்று அவர்கள் தமக்குத் தெரிவிக்கவில்லையென்றும் மேற்படிக் குழுவினர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

மேற்படி குழுவை வன்னியில் நேரடியாகச் சந்தித்து மக்களின் அவலங்களைச் சுட்டிக் காட்டியவரும் கேப்பாப்புலவு புதிய குடியேற்றத் திட்டத்திற்கு நேரடியாக இவர்களை அழைத்துச் சென்று மக்களின் அவலங்களைக் காட்டியவருமான நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கனேடிய வானொலிக்கு வழங்கிய செவ்வியில், தான் இக்குழுவினருக்கு தமிழ்மக்களின் அவலங்களை விலாவாரியாகவும் ஆதாரபூர்வமாகவும் எடுத்தியம்பியதாகவும் தனது அலுவலகத்தில் நடந்த அடாவடியையும் தனது பணியாளர்கள் கைது செய்யப்பட்டு புலனாய்வுத்துறையால் விசாரிக்கப்படும் சம்பவங்களையும் விளக்கியதாகவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் சிறிதரன் செவ்வியை அடிப்படையாகக் கொண்டு அவுஸ்திரேலிய ஊடகமொன்று ஸ்கொட்மொறிசனைச் செவ்வி கண்டபோது, சிறிதரனுடனான தமது சந்திப்புத் தொடரில் மழுப்பலான பதில்களையே அவர் வழங்கியிருந்தார் என்பதோடு தமிழ்மக்களுக்கு அங்கே எவ்வித பிரச்சினையுமில்லை என்ற ரீதியிலேயே தமது கருத்துக்களைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தார்.

மேலும் கோப்பாப்புலவு மக்களிடம் அவர்களை அழைத்துச் சென்று மக்களின் அவலங்களை காட்டினாரென்றும் எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் அம்மக்கள் தவித்துக் கொண்டிருந்ததை இக்குழு கண்கூடாகக் கண்டது என்றும் கருத்துத் தெரிவித்த சிறிதரன், ஆனால் ஜூலி பிசப் உட்பட்ட இக்குழுவானது தமிழரின் பால் கரிசனை கொண்டிருக்கவில்லையென்பதை தாம் அப்போதே உணர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரலோடு வந்திருந்த அக்குழு ஒரு கண்துடைப்புக்காகவே தமிழர் பகுதிகளுக்கு வருகை தந்திருந்ததை தாம் அறியக்கூடியதாக இருந்தது என்றும் இப்போது அவர்கள் திட்டமிட்டே தமிழரின் அவலங்களை இருட்டடிப்புச் செய்வது மட்டுமன்றி உண்மைக்குப் புறம்பான முறையில் தமிழ் மக்களின் நிலை குறித்துக் கருத்துத் தெரிவிக்கின்றனர் எனவும் சிறிதரன் குறிப்பிட்டார்.

மேற்கத்தேய நாடொன்றின் அரசியற் கட்சியின் உயர்மட்டக் குழுவொன்று இவ்வாறு மனச்சாட்சியற்ற முறையில் திட்டமிட்டு பொய்பரப்புரை செய்வது எமக்கு வேதனையளிக்கிறது எனவும் அவர் தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். (அ-2)

# ரஷ்ய போர் விமானங்களை விரட்டியது ஜப்பான்

ரஷ்ய போர் விமானங்கள் ஜப்பானுக்கு சொந்தமான தீவு பகுதியில் அத்துமீறி நுழைந்ததை அடுத்து ஜப்பான் போர் விமானங்கள் அவற்றை விரட்டியடித்துள்ளன.

கடந்த5ஆண்டுகளில்முதல்முறையாக இதுபோன்ற அத்துமீறல் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானுக்கு சொந்தமான தீவு ஹொக்கைடோ. இதன் சொந்தகாரர் தங்களுக்கு விற்றுவிட்டதால் அது தங்களுக்குத்தான் சொந்தம் என்று சீனா கூறி வருகிறது.

இதேபோல் ரஷ்யா உள்ளிட்ட வேறு சில நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. ஆனால் ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே இந்த தீவை யாருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று உறுதி கூறி வருகிறார். அவர் டிசம்பர் மாதம் பிரதமர் பதவியை ஏற்றார். அப்போது தீவை பாதுகாக்க ஜப்பான் கடும் நடவடிக்கை எடுக்கும் என்று சூளுரைத்தார்.

இந்நிலையில் ஹொக்கைடோ தீவு பிரச்சினையில் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலான சமரசத்துக்கு தாங்கள் தயாராக உள்ளதாக ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே நேற்று முன்தினம் அறிவித்தார். அவரது இந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களில் ரஷ்யாவின் சூ.27 ரக போர் விமானங்கள் இரண்டு ஹொக்கைடோ தீவின் வடபகுதியில் சில நிமிடங்கள் பறந்தன.

இதை ரேடாரில் பார்த்த ஜப்பான் விமானப் படை உடனடியாக போர் விமானங்களை அப்பகுதிக்கு அனுப்பி ரஷ்ய போர் விமானங்களை விரட்டியடித்தது. கடந்த 5 ஆண்டுகளில் இதுபோன்ற அத்துமீறலில் ரஷ்ய விமானங்கள் ஈடுபடுவது இதுவே முதல்முறை என்று ஜப்பானிய செய்தி நிறுவனங்கள் கூறியுள்ளன. (அ-5)

# நாட்டின் சட்ட அமுலாக்கத்தில் பெண்களின் பங்கு அவசியம்

## ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

நாட்டில் சட்ட அமுலாக்கத்தின் போது பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததென்று அணு விஞ்ஞானியும் முன்னாள் குடியரசுத் தலைவருமான அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற சிந்தனைக் கல்வி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்பக் கல்வியின்போதே சீர்திருத்தத்தை விதைப்பதன் மூலம் சமுதாயத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தற்போதைய கல்விச் சூழல், கற்கும் இடம், கற்பிக்கும் நடைமுறை ஆகியவற்றில் மாற்றத்தை உண்டாக்குவதன் மூலம் கல்விச் சீர்திருத்தத்தை கொண்டு வர வேண்டும்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பணி மகத்தானது. அவர்கள் தான் குழந்தைகளுக்கு அறிவை ஊட்டுகின்றனர். ஆசிரியர்களை இந்த சமூகம் மதித்து கௌரவிக்க வேண்டும். தாங்கள் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஆசிரியர்களுக்கு மத்தியில் ஏற்பட வேண்டும்.

கல்லூரிகளில் மாணவர்களை விட மாணவிகளே சிறப்பாக படிக்கின்றனர். முதல் பட்டத்தையும் பெறுகின்றனர். இந்த நிலை நாடாளுமன்றத்திலும் ஏற்பட வேண்டும். சட்ட அமுலாக்க அதிகாரம் படைத்த நாடாளுமன்றத்தில் பெண்கள் அதிகமாக இடம்பெற வேண்டும்.

குறைந்த பட்சம் 30 சதவீதம் பெண்களாவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆக வேண்டும். சட்ட அமுலாக்கத்தில் பெண்களுக்கும் முக்கிய பங்களிப்பு இருக்க வேண்மென மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# மேதகு என்பது வேண்டாம் மாண்புமிகுவே போதும்

## பிரணாப் முகர்ஜி அறிவிப்பு



தன்னை மேதகு ஜனாதிபதி என்று அழைக்க வேண்டாம். மாண்புமிகு என்பதை மரியாதைச் சொல்லாக பயன்படுத்துமாறு பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியை மேதகு என்ற மரியாதைச் சொல்லால் அழைப்பது வழக்கம். அதேபோல பிரதமர், முதல்வர்கள், அமைச்சர்கள் ஆகியோர் மாண்புமிகு மரியாதைச் சொல்லால் அழைக்கப்படுகின்றனர். எனினும் மேதகு என்று தான் அழைக்கப்படுவதை பிரணாப் முகர்ஜி விரும்பவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும் அரசுப் பதவிகளில் இருப்பவர்கள் அனைவரும் சமமாக கருதப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார் எனவும் எனவே தன்னை மேதகு என்ற மரியாதைச் சொல்லைப் பயன்படுத்தி அழைக்க வேண்டாம். மாண்புமிகு என்ற மரியாதைச் சொல்லால் அழைத்தாலே போதும் என்று பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பியுள்ள கடந்த 31 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அனைத்து நிகழ்ச்சிகளிலும் மேதகு என்ற மரியாதைச் சொல்லால் அழைக்க வேண்டாம் என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அறிவித்துள்ளார்.

எனவே மேதகு என்ற வார்த்தைக்குப் பதிலாக மாண்புமிகு என்ற மரியாதைச் சொல்லை பயன்படுத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# நிர்க்கதியான நிலையிலும் நிர்ப்பந்தத்திற்கு அடிபணியோம்

## அணுவாயுத உற்பத்தி தொடர்பில் ஈரான்

அணு ஆயுத குவிப்பு தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு வருமாறு அமெரிக்கா விடுத்த அழைப்பை ஈரான் நிராகரித்துள்ளது.

ஈரான் நாட்டில் தொடர்ந்து அணு ஆயுத பரிசோதனை நடத்தப்பட்டு வருகிறது. அணு ஆயுதங்களை குவித்து உலக நாடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதால் அந்நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளதுடன் உலக நாடுகள் அந்நாட்டிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கக் கூடாது என நிர்ப்பந்தித்து வருகிறது.

எனினும் ஈரான் இதுவரை அதற்கு மசியவில்லை. இதையடுத்து அணு ஆயுத குவிப்பு தொடர்பாக ஈரானுடன் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் கடந்த ஆண்டு பேச்சுவார்த்தை நடத்தியபோதும் இறுதியில் ஜூன் மாதத்தில் இந்த பேச்சுவார்த்தை முறிந்து போனது.

தற்போது மீண்டும் எதிர்வரும் 26ஆம் திகதி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முயன்று வருகின்றன.

இந்நிலையில் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஈரானுக்கு அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடன் அழைப்பு விடுத்தார். இதற்கு ஈரானின் தலைவரான அயதுல்லா அலி காமெனி தனது இணையத்தள பக்கத்தில் பதிலளித்துள்ளார்.

அதில் ஈரானுக்கு எதிராக துப்பாக்கியை பிடித்தபடி பேச்சுவார்த்தைக்கு வா அல்லது சுட்டு விடுவேன் என சொல்வது போல அமெரிக்கா செயற்படுகிறது. அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து பேச்சுவார்த்தைக்கு வரமாட்டோம் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# பாபர் மசூதி இடிப்பு வழக்கை மேன்முறையீடு செய்ய தாமதம் ஏன்?

## சி.பி.ஐயிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி

பாபர் மசூதி இடிப்பு வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்ட அத்வானி மற்றும் 19 பேருக்கு எதிரான மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்ய காலதாமதம் செய்தது ஏன் என சி.பி.ஐயிடம் உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் பா.ஜ மூத்த தலைவர் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, விஸ்வ இந்து பரிஷித் தலைவர் அசோக் சிங்கால் உள்ளிட்ட 20 பேருக்கு எதிராக சதி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த குறிப்பிட்ட குற்றச்சாட்டிலிருந்து மட்டும் 21 பேரையும் விடுவிக்க சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஏனைய பிரிவுகளின் கீழ் இவர்கள் மீதான விசாரணையை [illegible] [illegible] சிறப்பு நீதிமன்றம் தெரிவித்த நிலையில் இதை எதிர்த்து சி.பி.ஐ தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி அலோக்குமார் சிங் தள்ளுபடி செய்தார்.

இதை எதிர்த்து சி.பி.ஐ தரப்பில் உச்ச நீதிமன்றில் 90 நாட்களுக்குள் மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சி.பி.ஐ காலதாமதமாக 6 மாதங்களுக்குப் பிறகே மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்தது.

நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது மேன்முறையீட்டு மனுத்தாக்கல் காலதாமதமாக செய்வதற்குரிய காரணம் என்ன என்று சி.பி.ஐ இடம் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த அரசு தரப்பு சட்டத்தரணி பல்வேறு தஸ்தாவேஸ்கள் இந்தியில் இருந்ததால் அதை மொழி பெயர்க்க தாமதமாகிவிட்டதாக தெரிவித்தார்.

இது குறித்து நீதிபதிகள் தெரிவிக்கையில், சர்ச்சைக்குரிய இடத்தில் தற்போதைய நிலையே தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று அதில் மாற்றங்கள் ஏதும் செய்யக் கூடாது என்றும் உத்தரவிட்டனர்.

மேலும் நேற்றைய விசாரணையின்போது மத்திய அரசின் சார்பில் ஆஜராக வேண்டிய அடிசனர் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.எஸ்.சண்டியாக் ஆஜராகவில்லை. இதை கண்டித்துள்ள உச்ச நீதிமன்றம் அவர் இந்த வழக்கை மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொண்டாரா எனவும் கேள்வி எழுப்பினார். பின்னர் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை ஒருபோதும் தவறுக்கு துணை நிற்பதில்லை.

-கன்ஃபூஷியஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒரு ஊடகத்துறை பணியாளன் எழுதும் மடல் இது

ஜனநாயகத்தைத் தாங்கும் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத்துறையில் கடமை புரியும் ஒரு பணியாளன் எழுதும் மடல் இது.

அன்புக்குரியவர்களே! இலங்கைத் திருநாட்டில், ஊடகத்துறை பலருக்கு வெறுப்புக்குரிய துறையாகிவிட்டது.

ஏன்தான் அப்படி என்பது தெரியாவிடினும், ஜனநாயகம் என்பது தழைத்து சீரோங்க வேண்டுமாயின் ஊடகத்துறையின் வளர்ச்சியும் எழுச்சியும் அவசியமானதாகும்.

அதேநேரம் ஊடகங்களுக்கும் நிறைந்த பொறுப்புக்களும் தார்மீகக் கடமைகளும் உண்டென்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்த இரு நிலைப்பார்வையில், யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையில் பணியாற்றுகின்றவர்கள் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் மிகுந்த வேதனைக்குரியவை.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றின் விநியோக முகாமையாளர் தாக்கப்பட்டு அவர் எடுத்துச் சென்ற பத்திரிகைகளும், மோட்டார் சைக்கிளும் எரியூட்டப்பட்டுள்ளன.

நித்திரை விழித்து அதிகாலை வேளையில் யாருமற்ற வீதியில், பத்திரிகைகளை எடுத்துச் செல்வதென்பதற்குள் இருக்கக் கூடிய எங்கள் கஷ்டங்களும் அர்ப்பணிப்புக்களும் ஒரு கணம் நினைத்துப்பார்க்க வேண்டியவை.

அதிலும் அந்தப் பணியைச் செய்கின்றவருக்கும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கக் கூடிய செய்திகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இருக்க நியாயம் இல்லை.

பத்திரிகை விநியோகம் என்பது தொழில் நிமித்தம் நடைபெறுகின்ற பணி.

தனது குடும்பத்திற்காக அந்தப் பணியாளன் செய்கின்ற அர்ப்பணிப்புக்கள் மதிக்கப்பட வேண்டும்.

யாருமற்ற வீதியில் செல்கின்றேன் என்ற பயமற்ற நிலைமையை உருவாக்குகின்ற தார்மீகப் பொறுப்பு அனைவருக்கும் உரியது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

பத்திரிகை விநியோகத்தில் ஈடுபடுகின்றவரை தாக்குகின்றபோது அதனால் உயிராபத்து நடந்தால் அந்தப்பணியாளனின் குடும்ப நிலை எவ்வாறாக அமையும் என்பதைச் சிந்திப்பதற்கு இன, மத, மொழிப் பேதங்கள் தடையாக இருக்குமென நாம் கருதவில்லை.

பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தவறானவையாயின் அது தொடர்பில் அந்தந்தப் பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதே பொருத்துடையதாகும்.

அதேவேளை பத்திரிகை நிர்வாகங்களும் தம்மை-தமது நிறுவனத்தை - தமது பணியாளர்களை காத்துக்கொள்ளும் வகையில் நடந்து கொள்வதும் அவசியமானது.

உனது உயிரைவிட வேறெதுவும் பெறுமதியான சொத்தாகாது, என்ற பி.பி.சியின் அடிப்படைத்தத்துவத்தை செய்தி எழுதுவோர் சதா நினைத்துக் கொள்ள வேண்டும்.

உயிர் போனபின் ஊடகத்துறையல்ல; உலகமே திரண்டுவந்து கோஷம் எழுப்பினாலும் இழப்பு இழப்புத் தான் என்பதால், நிதானமும் - அவதானமும் மிகவும் அவசியமானவை. இது ஒரு ஊடகப்பணியாளன் அனைவருக்கும் விடுக்கும் அன்புமடல்.

# அமாவாசை பௌர்ணமியானது எப்படி? அபிராமிப்பட்டரின் சாதனை!



ஆதிபராசக்தியானவள் அபிராமியம்மையாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் தலம்தான் திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் ஆலயம். இது இந்தியாவிலே சோழநாட்டிலே அமைந்துள்ள ஓர் அருட்தலமாகும். இந்தத் திருக்கடவூரிலே வாழ்ந்த அமிர்தலிங்க ஐயர் தம்பதிகளுடைய அரிய புத்ல்வர்தான் அபிராமிப்பட்டர். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன்.

அம்பிகைமீது இடையறாத பக்தி பூண்டவர். எப்போதும் அம்பாள் நினைவாகவே இருக்கும் இவர் தியானத்திலே நிஷ்டையிலமர்ந்து கண்களை மூடிய வண்ணம் அம்பிகையுடன் உரையாடுவார். இவரது செய்கைகள் பைத்தியக்காரர் போன்றிருந்தன. ஆதலால் இவருக்கு விசர் என்று முடிவு கட்டி விட்டார்கள். யோக சித்தியுள்ள இவர் உலகப் பற்றின்றி துறவிபோன்று வாழ்ந்திருந்தார்.

ஒருநாள் தஞ்சையை அரசாண்ட சரபோஜி மன்னர் தை அமாவாசையன்று காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கடலாடித்திரும்பும் வேளை அபிராமி அன்னையைத் தரிசிக்கும் பொருட்டு அங்கு எழுந்தருளினான்.

மன்னர் வந்தபோது அனைவரும் எழுந்து மரியாதை செலுத்தினர். தியானஞ் செய்துகொண்டு நிஷ்டையிலமர்ந்திருந்த அபிராமிபட்டர் எதுவுமே அறியாமல் கண்களை மூடியவண்ணம் அம்பாளுடன் கதைத்துக்கொண்டிருந்தார். அதைக்கண்ணுற்ற சரபோஜி மன்னன் இவர் யார்? என வினவினான். அதற்கு அங்குள்ளோர் இவர் ஒரு பைத்தியக்காரர் என்று பதிலளித்தனர்.

அரசர் அவரைப் பரீட்சிக்க எண்ணி இன்று என்ன திதி என்று கேட்டார். அதற்கு அவர் அம்பிகையின் அருட்பிரகாசத்தில் ஒளிமயமாக இருந்த அம்பாளுடன் ஒன்றிப்போயிருந்தபடியால் இன்று பௌர்ணமிதானே! என்று கூறிவிட்டார். இதைக்கேட்ட அரசன் உண்மையில் இவருக்கு விசர் தான் என எண்ணியவாறு சென்றுவிட்டார்.

### இன்று தை அமாவாசை

சிறிதுநேரத்தின் பின் தியானத்திலிருந்து விடுபட்ட அபிராமிப்பட்டர் கண் விழித்துப்பார்த்தார். அப்போது அங்கு நின்றவர்கள் நடந்ததை விபரித்தனர். உடனே அபிராமிப்பட்டர் மிகுந்த வேதனைப்பட்டார். அபிராமித்தாயே! நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும் நான் சொன்ன வார்த்தையை நீதான் உண்மையாக்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

திருக்கடவூர் அபிராமி சந்நிதியின் முன்பாக ஆழமான ஒரு குழி வெட்டுவித்தார். அதற்குமேலே ஒரு விட்டம் அமைத்து நடுவில் ஓர் உறி கட்டி நூறு கயிறுகளால் பிணைக்கப்பட்ட அந்த உறியின்மேலே ஏறியிருந்தார். குழியிலே விறகுகளைப் போட்டுத் தீமூட்டினார். அபிராமி அம்பாள் மேல் அந்தாதி பாடினார்.


ஒவ்வொரு பாட[illegible] முடியமுடிய ஒவ்வொரு கயிறாக [illegible]த்துக்கொண்டு வந்தார். 79 ஆவது [illegible] பாடிய போது வானம் இருள்மயமா[illegible]

சூரியன் மறைந்த[illegible] எங்கும் இருட்டு. அம்பிகை காட்சி [illegible]டுத்தாள். தன்னுடைய காதுத்தோட்[illegible]க் கழற்றி வான் வெளிமீது கழற்றி எறி[illegible]தாள். அது வட்ட நிலாவாக வானிலே தோ[illegible]றியது. எல்லோரும் அற்புதம்! அற்புத[illegible]! என்று அதிசயித்து நின்றனர். அவ்வே[illegible]ளை அபிராமிப்பட்டர் அம்பிகையின் அ[illegible]ருட்பிரவாகத்தில் மூழ்கித் திளைத்தார்.

**சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்**

தாயே! அமாவாசை பௌர்ணமி ஆகி விட்டது. என் வாக்கைக் காப்பாற்றிவிட்டாய் அம்மா! என்று கண்ணீர் மல்க நின்றார். பின்பு அம்பிகை மறைந்தாள். உடனே அபிராமிப்பட்டர் அந்தாதியை பூர்த்தி பண்ணினார். இந்த நாள் தான் இன்றைய தை அமாவாசையாகும். இதிலிருந்து நாம் அறிந்துகொள்வது யாதெனில் உண்மையான நம்பிக்கையுடனே அம்பாளை வழிபட்டால் நிச்சயம் அருள் கிட்டும் என்பதாகும்.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



சமீபத்தில் கலிபோர்னியாவில் இயற்கை வளங்களை காப்பதைப்பற்றிய கூட்டம் ஒன்று நடந்தது. சுற்றுப்புறச் சூழலைக் காப்பதற்கும் உலகை மேலும் மாசிலிருந்து தடுப்பதற்கும் உள்ள சிறந்த முறைகளை ஆராய்ந்தனர். இறுதியில் சில சிறந்த முறைகளைத் தேர்ந்தெடுத்தனர். கூட்டத்தின் முடிவில் இந்திய விஞ்ஞானக்குழு ஒன்று வேதங்களின் அடிப்படையில் அமைந்த சில ஆலோசனைகளை அளித்தனர். என்ன ஆச்சரியம்! கூட்டத்தின் முடிவில் அறிவிக்கப்பட்ட முறைகளும் நம் இந்திய விஞ்ஞானிகள் தந்த ஆலோசனைகளும் ஒன்றாக இருந்தன. இவை பூ- சுக்தம் என்னும் வேதஸ்லோகத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. அந்தப் பரமஞானம்தான் ஆர்கிமீடிஸ் என்னும் விஞ்ஞானியை அவர் குளியலறையில் குளித்துக் கொண்டிருக்கையில் யுரேக்கா (கண்டுபிடித்துவிட்டேன்) என்று கூச்சலிடச் செய்தது. அந்த அறிவுதான் கெக்குளே என்னும் விஞ்ஞானியின் கனவில் பாம்பு தன்னையே முழுங்குவது போல் காட்டியது. அதை அடிப்படையாகக்கொண்டுதான் அவர் பென்ஜீன் அணுவின் அமைப்பு வட்டமானது என்பதைக் கண்டுபிடித்தார். பரம சைதன்யத்தின் (Cosmis Conscious) அந்த அனுபவம்தான் ஐன்ஸ்டீனை பொது தொடர்பு தத்துவத்தை கண்டுபிடிக்க வைத்தது. இவை அனைத்தையும் பார்க்கும் பொழுது இத்தகைய ஞானம் மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது என்று புரிகிறது. ஒருவர் தனது எல்லா முயற்சிகளையும் கைவிட்டு செயலிழந்து நிற்கும்பொழுது கடவுள் அல்லது அந்த பரமஞானம் அவனுள்ளிருந்து வேலை செய்கிறது. அப்பொழுது அரும் கண்டுபிடிப்புக்கள் நிகழ்கின்றன. கணிதமேதை இராமானுஜருக்கு நாமகிரி என்னும் தேவி அந்தர்யாமினாக இருந்து பல்வேறு தெய்வீக அனுபவங்களைத் தந்து அவரின் பல்வேறு கண்டுபிடிப்புக்களுக்கு கபாரணமாக இருந்தார்.

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் முத்தமிழ் விழா எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் விழாக் குழுத் தலைவர் எஸ். சாமுவேல் தலைமையில் நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (அ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் செ.இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரபல வர்த்தகர் இ.ச.பே.நாகரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலக கணக்காளர் ஆ.கிரிதரன், கௌரவ விருந்தினராக முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் து.யோகராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ-8)

### அம்மா பகவானின்

## ஆன்மீக நிகழ்வு நேரடி ஒளிபரப்பு

(யாழ்ப்பாணம்)

வரதபாளையம் ஸ்ரீ கல்கி ப[illegible]வான் ஆலயத்திலிருந்து நாளை நாயிற்றுக்கிழமை முற்பகல் 8.3[illegible] மணி முதல் பிற்பகல் 4 மணி வ[illegible]ரை Web cast மூலம் ஒளிபரப்பாகும் ஒருநாள் ஆன்மீகப் பயிற்சி வகுப்பில் பங்கேற்குமாறு யாழ்.மாவட்ட ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

மேற்படி ஆன்மீக பயிற்சி வகுப்பானது நல்லூர் வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

வயது எல்லை வேறுபாடின்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நல்ல காலம் வருகிறது



சூழ்நிலைக்குத் தக்கபடி வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வதுதான் வெற்றிக்கான இரகசியம்.

ஒரு செயலின் பயனில் கருத்துச் செலுத்தும் அதேயளவிற்கு அதைச்செய்யும் முறையிலும் கவனம் செலுத்துவது அவசியம்.


தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விடபோராடி மாள்வதே மேலானது. ஒருபோதும் அழக்கூடாது.

ஒரு இலட்சியத்தை எடுத்துக்கொண்டு அதற்காக உன்னை அர்ப்பணித்துக்கொள். பொறுமையுடன் விடா முயற்சி செய்தால் உனக்கு ஆதரவான நல்லகாலம் நிச்சயம் வரும்.

சுயநலத்துடன் வாழாமல் நான் அல்லேன் நீயே என்னும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுங்கள். எல்லா நன்மைகளுக்கும் ஒழுக்கங்களுக்கும் இதுவே அடிப்படைப்பண்பு.

உன்னால் எல்லோருக்கும் சேவை செய்யமுடியும். அதுவும் கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போட்டியின் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட கெரான் பொலார்ட்

# தீவுகளின் தோல்விப் பயணம் தொடர்கிறது!

மேற்கிந்தியத் தீவுகளுடனான 4 ஆவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது. சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்திலிருந்து விக்கெட்டுக்களை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களையும், 8 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று தடுமாறியது. ஆனால் கெரான் பொலார்ட் சிறப்பாக ஆடி அணி 220 ஓட்டங்களைப் பெற உறுதுணையாக இருந்தார்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெரான் பொலார்ட் 136 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களையும், டெரன் சமி 42 பந்துகளில் 25 ஓட்டங்களையும், சுனில் நரைன் 22 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஜோன்சன், பென் கட்டிங் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், கிளின்ட் மக்காய், கிளென் மக்ஸ்வெல், ஜேம்ஸ் ஃபோள்க்னர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

221 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 44.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஷேன வொற்சன் 84 பந்துகளில் 76 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 65 பந்துகளில் 37 ஓட்டங்களையும், அடம் வோகஸ் 39 பந்துகளில் 28 ஓட்டங்களையும், ஆரொன் ஃபின்ச் 30 பந்துகளில் 25 ஓட்டங்களையும், பிலிப் ஹியூஸ 44 பந்துகளில் 23 ஓட்டங்களையும் கைப்பற்றினர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக ரீனோ பெஸ்ட், சுனில் நரைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், அன்ட்ரே ரசல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக கெரான் பொலார்ட் தெரிவானார்.

## கிளாக் - வொட்சன் பனிப்போர்



இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதில் அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வொட்சனின் இடம் கேள்விக்குறியதாக உள்ளது.

31 வயதாகும் வொட்சன் பந்துவீசுவதால் காயம் ஏற்படுகிறது. எனவே துடுப்பாட்டத்தில் மட்டுமே கவனம் செலுத்தவுள்ளேன். டெஸ்ட் போட்டியில் தொடக்க வீரராகத்தான் களமிறங்கு வேன் என்றும் ஒரு துடுப்பாட்ட வீரராக தன்னைக் கருதவேண்டும் எனவும் ஷேன் வொட்சன் கூறியிருந்தார்.

இது குறித்து அவுஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் கூறுகையில், சகலதுறை வீரராக வொட்சன், தன்னை கருதி விளையாடினால் இந்தியாவுக் கெதிரான டெஸ்ட் தொடரில் அவர் விளையாடலாம். ஆனால் அதற்கும் ஏகப்பட்ட போட்டி உள்ளது.

திறமையின்றி அவுஸ்திரேலிய அணிக்குள் எளிதில் யாரும் நுழைந்து விட முடியாது. வொட்சன், சில காலங்களாக சிறப்பாக செயற்பட்டு வருகிறார். குறிப்பாக ஒருநாள், T20, டெஸ்ட் என்று அனைத்து வடிவங்களிலும் அவர் சிறப்பாக விளையாடுகிறார்.

ஆனால் அவர் பந்து வீச்சையும் செய்து சகலதுறை வீரராகசெயற்பட்டால் போட்டி குறைவு, துடுப்பாட்டம் மட்டும் என்றால் மற்ற துடுப்பாட்ட வீரர்களிடமிருந்து அவருக்கு கடுமையான போட்டி ஏற்படும் என்றார். மேலும், வொட்சன் சிறப்பான முறையில் டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு திரும்ப அனைத்து உதவிகளும் செய்யப்படும் எனவும் கூறினார்.

## விளையாட்டுத் துளிகள்

- ✔ டெஸ்ட் ஒப் இந்தியா அணிக்கு எதிரான ரானி கோப்பை போட்டியில் மும்பை அணியின் சச்சின் சதம் அடித்து அசத்தினார். இதன் மூலம், உள்ளூர் போட்டியில் அதிக சதம் (81) அடித்த கவாஸ்கரின் சாதனையை சமன் செய்தார்.
- ✔ கான்பெராவில் நடைபெற்ற 3ஆவது ஒருநாள் போட்டியின்போது மேற்கிந்தியத் தீவு வீரர் கிறிஸ் கெயிலுடன் வாக்குவாதம் செய்த ஆஸி. வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பாட்டின்சனுக்கு போட்டிக்கான சம்பளத்தில் 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
- ✔ அவுஸ்திரேலிய விளையாட்டு வீரர், வீராங்கனைகளிடையே ஊக்கமருந்து உபயோகிக்கும் பழக்கம் அதிகரித்து வருவதாக அந்நாட்டு அரசு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில், கிரிக்கெட்டில் அத்தகைய பிரச்சினை ஏதுமில்லை என்று கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.
- ✔ நான் மும்பை அணிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் சச்சின் டெண்டுல்கரிடம் இருந்து இன்னும் சில பாடங்களைக் கற்க இருப்பதாகவும் அவருடன் இணைந்து ஆடுவதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கிப்பொண்டிங்.
- ✔ மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான ருவென்ரி ருவென்ரி போட்டிக்கான அவுஸ்ரேலிய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பல இளைய வீரர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அணி விபரம்: ஆரொன் ஃபின்ச், ஷோன் மார்ஷ், ஜோர்ஜ் பெய்லி, அடம் வோகஸ், பென் றோர், பிரட் ஹடின், பென் கட்டிங், நேதன் கோல்டர்நீல், ஜேம்ஸ் ஃபோள்க்னர், கிளின்ட் மக்காய், பென் லாஃப்ளின், ஜோஷ் ஹேஷல்வூட்

## மகளிர் உலகக் கிண்ணத்தில் இந்தியா

# ஆறு விக்கெட் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி




மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் 7ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது.

ஒடிசாவின் கட்டக் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 192 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியில் அதிகபட்சமாக நீடா தார் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களும், நயின் அபிதி 58 ஓட்டங்களும் பெற்றனர்.

இந்தியத் தரப்பில் நிரஞ்சனா 3 விக்கெட்டுகளையும், கோஸ்வாமி 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய இந்திய அணி 46 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களை எடுத்து வெற்றி கண்டது. இந்திய அணித் தலைவி மிதாலி ராஜ் 1 சிக்ஸர், 13 பவுண்டரிகளுடன் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன்மூலம் உலகக் கிண்ணப் போட்டியில் சதமடித்த 3ஆவது இந்திய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார் மிதாலி. இந்த ஆட்டத்தில் வெற்றி கண்டதன் மூலம் இந்தியா 7ஆவது இடத்தைப் பிடித்தது. பாகிஸ்தான் இறுதி இடத்துக்கு தள்ளப்பட்டது.




## இந்தியாவை வீழ்த்துவோம் முழங்குகிறார் ஆஸி.வேகப்புயல்

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்யும் அவுஸ்திரேலிய அணி 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் போட்டி எதிர்வரும்வரும் 22 ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகிறது. இதற்காக 8 வீரர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து இந்தியா வந்துள்ளனர்.

இந்தியாவுடன் இடம்பெறும் டெஸ்ட்போட்டி குறித்து அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய அணி சொந்த மண்ணில் விளையாடுவதால் அவர்களுக்கு சாதகமாக இருக்கலாம். அத்துடன் சிறந்த துடுப்பாட்ட வரிசையும் உள்ளது. அதை தகர்த்துவிட்டால் வெற்றியை எங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம். அதற்கான வலு எங்களிடம் உள்ளது. எங்கள் அணியில் சிறப்பான வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். எனவே வேகப்பந்து மூலம் இந்தியாவை வீழ்த்தும். இந்த தொடரை எங்களால் கைப்பற்ற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

இங்கிலாந்து அணி இந்திய மண்ணிலேயே இந்தியாவை வீழ்த்தியுள்ளது. அதேபோல நாங்களும் வீழ்த்துவோம். 20 விக்கெட்டுகளையும் வீழ்த்தும் அளவிற்கு நாங்கள் வலுவாகவே இருக்கிறோம.

இந்த போட்டிக்காக கடுமையாக உழைத்து உள்ளோம். அது நிச்சயம் நல்ல பலன் கொடுக்கும். 2004 ஆம் ஆண்டு இந்தியாவை வீழ்த்தி தொடரை கைப்பற்றினோம். அதேபோல இப்போதும கண்டிப்பாக நடக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை தடுக்கும் சட்டம் நிறைவேறியது

பயங்கரவாதிகளுக்கு நிதி வழங்குவதனை தடுக்கும் சட்டமூலமொன்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினால் இந்த சட்டம் முன்வைக்கப்பட்டது. ஏற்கெனவே முன்வைக்கப்பட உத்தேச சட்டமூலத்தில் பயங்கரவாதி என்பதற்கு சரியான விளக்கம் அளிக்கப்படவில்லை.

இதன் காரணமாக குறித்த சட்டமூலத்தைநிறைவேற்றுவது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. குறித்த சட்டமூலம் சில திருத்தங்களுடன் மீளவும் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது வாக்கெடுப்பு எதுவுமின்றி குறித்த சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்குவது முற்று முழுதாக தடைசெய்யப்பட்டுள்ளது.

மதங்களுக்கு எதிரான பிரசாரங்கள், கட்டாய மதமாற்றம் போன்ற விடயங்களும் பயங்கரவாதத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதும் பயங்கரவாதமாகவே கருதப்படும் என சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாடாளு மன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(செ-11)

## இலங்கைக்கு எதிரான தீர்மான...

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்கு பிறகு நேற்று முதல்வர் சட்டப் பேரவையில் பதில் உரை அளித்தார்.

அதில் அவர் இலங்கை பற்றி கூறுகையில்,

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இங்கே சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்கள்.

எமது அரசைப்பொறுத்த வரையில், இடம் பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்பட வேண் டும். அவர்கள் சிங்களவர்களுக்கு இணையாக அனைத்து உரிமைகளுடன் வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது.

இந்தநிலை ஏற்படும் வரை இலங் கை அரசின் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்படவேண்டும், இலங்கையில் இணப்படு கொலையை நிகழ்த்தி போர்க் குற்றம் புரிந்தவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ;ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் .

இது தொடர்பாக ஏற்கெனவே இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுமத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்தியஅரசு அதை கண்டுகொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தின் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்வேண்டும் என்பதை மீண்டும் நான் வலியுறுத்துகின்றேன்.

சென்ற ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு ஒரு வலுவான தீர்மானத்தை கொண்டு வந்தது இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக மத்திய அரசு வாக்களிக்க வேண்டும் என்று நான் பாரதப் பிரதமரை தொடர்ந்து வலியுறுத்தினேன்.

முதலில், அதை ஆதரிப்பது பற்றி எதுவும் தெரிவிக்காத இந்திய அரசாங்கம், பின்னர்

எனது வலியுறுத்தல் காரணமாக அந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. இருப்பினும் அந்தத் தீர்மானத்தின் வலுவை இழக்கச்செய்தவர் பாரதப் பிரதமர்.

இந்த நீர்த்துப்போன தீர்மானம் மீதே இலங்கை அரசு இன்னமும் நடவடிக்கை எடுக்காத சூழ்நிலையில், மீண்டும் ஒரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமை குழுவில் அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டு வரவுள்ளது என்ற செய்தி வந்துள்ளது.

இது போன்றதொரு தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக்கூட்டத்தில், அமெரிக்க நாடு கொண்டு வருவது ஒருபுறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்டையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டுவரும்போது அதை மற்ற நாடுகளுடன் இணைந்து இந்தியா நிறைவேற்ற வேண்டும் என்றும் மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என ஜெயலிலிதா தெரிவித்துள்ளார்.(எச-11)

## மீனவர்கள்...

பெயர்ந்தோர் மக்கள் அமைப்பின் தலைவர் சகாதேவனால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடைபவனி நேற்று பருத்தித்துறை நகரத்தை வந்தடைந்தது.

இந்த நடைபவனி போராட்டத்திற்கு ஆதரவாக வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தால் பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இந்த ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தினால் பாதுகாப்பு அமைச்சு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் அரச அதிபர், பருத்தித் துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பருத்தித்தறை 521 வது படைப் பிரிவின் கட்டளைத்தளபதி ஆகியோருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் 250ற்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.(செ-11)

## ஊழல் மோசடிகள்..

அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் காசோலை ஒன்றை விடுப்பதற்கு தரகுப்பணம் பெற்றுக் கொண்டமை, வகுப்பறைக்கு நிறம் பூசுவதற்கான கட்டணத்தை செலுத்த 13 வயதுச் சிறுமி அயல் வீட்டுத் தோட்டத்தில் தேங்காய் திருடியமை, வங்கிக் கடனைச் செலுத்த இராணுவக் கப்டன் முஸ்லிம் பெண் போன்று வேடமிட்டு வங்கியை கொள்ளையிட முயற்சித்தமை போன்ற சம்பங்கள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் மக்களின் நெருக்கடி நிலைமைகளைஅரசாங்கம் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும் என கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## கரப்பந்தாட்டப் போட்டி

வட மாகாண கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைமன்ற மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிக்கு வட மாகாணத்தில் இருந்து அதிகளவு ஆண்கள், பெண்கள் அணிகள் பங்குபற்றுவுள்ளன என வட மாகாண கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரன் அறிவித்துள்ளார். (செ-11)

## கொழும்பு...

இலங்கைக்கு வருகை தந்து அதற்கான ஏற்பாடுகளுக்கு தமதுஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகவும் அமைச்சின் அதிகாரி கூறினார். கமலேஷ் சர்மா தலைமையான உயர்மட்டக்குழு இங்கிருக்கும் காலப்பகுதியில் பொதுநலவாய உச்சி மாகாநாட்டிற்கான பிரத்தியேக இணையத்தளம் மற்றும் விசேட இலச்சனை ஆகியனஉத்தியோக பூர்வமாக அங்குரார்பணம் செய்து வைக்கப்படும் எனவும் அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார்.(செ-11)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

VACANCIES- FACULTY OF ENGINEERING,KILINOCHCHI

Applications are invited by me up to 28.02.2013 from suitably qualified persons for the following posts.

01.POST OF WORKS ENGINEER [CIVIL] GRADE III

QUALIFICATIONS:

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution.

OR

(B) Should possess a National Diploma in Technology specializing in Civil Engineering or equivalent, with at least seven (07) years of experience in Civil Engineering works in a recognized establishment.

NOTE: - The in-plant training period shall not be counted for the period of experience.

Method of Recruitment : Selection by a structured interview.
Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.

Salary Scale: U- EX1 (II) - 2006 A
Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;6X645;6X585-35,800/- p.m.

AGE: Not more than 45 years. This age limit will not be applicable to those candidates who are employed in the public sector organization.

02.UNIVERSITY MEDICAL OFFICER

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

QUALIFICATIONS:

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

NOTE: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

Salary Scale : U- MO 1 (II) Rs. 28,360 - 10 x 645 ; 1 x 790 - 35,600/- p.m.

Selection By : Interview.

STATUTORY BENEFITS

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Non Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- per application form drawn in favour of the **Bursar, University Of Jaffna.**

The envelope containing duly filled application form must bear "the name of the post applied for" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna,
03.02.2013. (C-2384)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம்

இளவாலை

பாதை இல: 788

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கடந்த மூன்று ஆண்டுகளாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவராகவும் சேவையாற்றி தற்போது இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள

**திரு.பொன்னுத்துரை கெங்காதரன்**

அவர்கள் சேவை தனில் பல உயர்வுகள் கண்டு பெருமையுடன் சிறந்து விளங்க உளம் நிறைந்த நல் வாழ்த்துக்களுடன்

உரிமையாளர்கள், பணியாளர்கள், சாரதி நடத்துநர்கள், சிற்றூர்திச் சேவை சங்கம், இளவாலை.

Valampurii Graphics (1692)


## கடை காணி விற்பனைக்கு

யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்தியில் பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் 1 1/2 பரப்புக் காணியும் கடைகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777445844 (683)

## கடை வாடகைக்கு OR விற்பனைக்கு

Toyota Carina சாரதியுடனோ இல்லாமலோ மாத, நாள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 0779361427 (697)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு: T.P: 021 321 0815, 021 567 1540 E-mail: valampurijaffna@gmail.com

## Deutsch, Dutch, French, English

**2013 புதிய வகுப்புகள் விபரம்**

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464 (அ-2252)

## எங்கேயும்! எப்போதும்!! எந்த வேளையிலும்!!!

பல்கலைக்கழக அனுமதி – சாதாரணதரத்துடன் உயர்கல்வி தொழில் உத்தரவாதமான கற்கைநெறிகள் – வெளிநாட்டுக் கல்வி, தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான

**இலவச வழிகாட்டி ஆலோசனைகளுக்கு**

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி விரகத்தொத்து

Sikaram.lk www.sikaram.lk

உங்கள் கேள்விகள், சந்தேகங்களை edusikaram@gmail.com இற்கு எழுதியனுப்புங்கள்

இலவச நேரடி ஆலோசனைச் சேவைக்கு: 021 300 80 60 / 0773 616 798 திங்கள் – சனி 10am – 5pm

சிகரம் ஊடக இல்லம் இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## யாழ் மண்ணில் A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

**BTEC HND in...**

- Computing & Systems Development
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Biomedical Science
- Law
- Pshycology



Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)

**10%** பெப்ரவரி 10ஆந் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விஷேட விலைக் கழிவு

மேலதிக விபரங்களுக்கு

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.

0777 102 131 / 077 311 4105

Email : info@bcas.lk

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

www.bcas.lk

## Aptech COMPUTER EDUCATION — Unleash your potential

**உலகின் No.1 கணனிக்கல்லூரி**

**உலகின் நம்பர் 1 நிறுவனத்தின் INTERNATIONAL DIPLOMA**



FREE

10 புத்தகங்கள் 4லிருந்து CD கள் இலவசமாக வழங்கப்படும்

BSc. பட்டப்படிப்பின் 2ஆம் வருடத்தை நேரடியாகத் தொடர முடியும்

**Modules**

- C Language
- HTML
- DHTML
- JavaScript
- Dreamweaver
- SQL
- XML
- Java
- Advanced Java
- C#
- Cloud Computing
- Project

**தன்மைகள்**

- அனைத்து நாடுகளிலும் தொழில்வாய்ப்பை பெறக்கூடிய சான்றிதழ்.
- மேலதிகமாக SQA சான்றிதழைப் பெறமுடியும்.
- புதிய தொழில்நுட்பம்
  - Mobile Technology
  - Web Technology
- உலகநாடுகளில் பட்டப்படிப்பைத் தொடரும்போது பாடவிலக்கு அழிக்கப்படும்
- O/L தகைமையுடன் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு இலகுவான வழி

கடந்த A/L பரீட்சையில் 2"A" சித்திக்கு மேற்பட்ட அனைவருக்கும் 50% SCHOLARSHIP

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**09/02/2013,11/02/2013 at 9 AM**

தொடர்புகளுக்கு 0212219456

APTECH Computer Education World Wide

No.04, Clock Tower Lane,Navalar Road, Jaffna.

(பொருளியல் கல்லூரி அருகாமை Science corner ஒழுங்கை)

www.aptech-globaltraining.com

## Dan தமிழ் ஒளி & ஊடக FM 91.4 இல்

**நேரடிப் பயிற்சி, தொழில்வாய்ப்புடன் University of Wollongong, Australia பட்டக்கல்வி வாய்ப்பையும் வழங்கும்**

# Mass Communications & Media Studies (ஊடகக் கற்கைகள்)

**Introductory ▶ Certificate ▶ Diploma ▶ Degree**

அறிவிப்பாளர் பயிற்சி, Photography, Graphic Designing, Audio-Video Editing உடன் அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடகக் கற்கைகள்

with

ஆங்கிலத்தில் இலகுவாக பேச, எழுத தொடர்பாடும் திறனை உறுதிப்படுத்தும் **English for Communication**

Office Software, Internet & Email பயிற்சிகளுடன் கூடிய **Information Technology**

டான் தொலைக்காட்சி, அலை FM, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னணி அறிவிப்பாளர்கள், ஊடகவியலாளர்களிடம்

பயிற்சிபெறும் அரிய வாய்ப்பு

சுயவிபரக்கோவை, தொலைபேசி இலக்கத்துடன், பெப்ரவரி 15ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு/மின்னஞ்சலுக்கு விண்ணப்பிக்கவும்.

சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி

221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தொ.பே.: 021 300 80 60

நேரடி: 0773 616 798

மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.